# திராவிடன்

'பிரிவினை வார மலர்'



தயாராகி வருகிறது!

படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமுது! எழில் மிக்க நடை!!

டோஸ்டவஸ்கியின் காதலிகள்

இரா. இளஞ்சேரன் தீட்டியது

விலை 4 அணா.

முன் பணத்துடன் தேவைகளுக்கு எழுதுங்கள். தக்க கழிவு உண்டு.


பாண்டியன் பதிப்பகம்,
16, ரிலையனஸ் ரைஸ் மில் தெரு,
சென்னை-1.



19—9—52 : வெள்ளி : விலை 4 அணா வெளிநாடு 5 அணா




அன்னை நாகம்மையார்



திராவிடன்

சென்னை : 19—9—52 : வெள்ளி

# 'பித்தந் தெளிய மருந்து...'

★

'திராவிடநாடு திராவிடருக்கே'. திராவிட நாட்டினரின் இந்த இதயகீதத்தை—மகத்தான உரிமையைத் தட்டிக் கழித்துவிடலாம் என்று எண்ணி இறுமாந்திருந்த ஆதிக்க வெறியர்கள் இன்று இப்பிரச்சினையைப்பற்றி கவலைப்படாத நாளில்லை. அதேபோல ஆதிக்க வெறியர்களுக்கு அடிபணிந்து "இந்தியா ஒரே தேசம்" அதைத் துண்டாடுவதைக் கண்டு சகியோம்" என்று கூப்பாடு போட்டுவந்த பிரகஸ்பதிகள்' தங்களது கூப்பாட்டுக்கு மக்கள் செவி சாய்க்கவில்லையென்பதை உணர்ந்து வருகின்றனர் என்றால் மிகையாகாது.

திராவிட நாட்டுப் பிரிவினையை எதிர்த்து மார்தட்டிப் பேசிய மகாமேதாவிகளிலிருந்து—சிதைந்ததுகள்—சின்னதுகள் வரை இன்று தங்களின் எதிர்ப்பு ஓலத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டனர்.

எனினும் முற்போக்கு சக்திகள் வரிசையிலே நின்று பணியாற்றும் கம்யூனிஸ்ட் தோழர்கள் மட்டும் திராவிட நாட்டுப் பிரிவினையை வெளிப்படையாக ஒப்புக் கொள்வதற்கு சற்று வெட்கப்படுவதாகவே தெரிகிறது. திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையானது—இனவெறிக்காகவோ, அல்லது திராவிடத்திலேயுள்ள மற்ற இனத்தவரின் வாழ்வைப் பறிப்பதற்காகவோ அல்ல வென்பதை மிகத் தெளிவாக விவரித்துக் கூறப்பட்டு வருகிறது. தென்னாட்டின் பொருளாதார விடுதலையை அஸ்திவாரமாகக் கொண்டதே 'திராவிட நாட்டுப் பிரிவினை."

இப்பேர்ப்பட்ட ஜீவாதாரமான பிரச்சினையை, கருத்தில்லாத நீண்ட வார்த்தைகளைப் போட்டு குழப்பி எதிர்ப்பதென்பது தென்னாட்டின் விடுதலைக்குச் செய்யும் பெருந்துரோகமாகும்.

தேசிய முகாமிலேயுள்ள சிலர் நாட்டுப்பிரிவினையை எதிர்க்கின்றனரென்றால் அது அவர்களது எஜமானர்கள் இடும் கட்டளைக்கு உட்பட்ட செய்கையேயாகும். ஆனால் முற்போக்கு கொள்கையுடையோர் ஒரு நாட்டின்—இனத்தின் பொருளாதார விடுதலைக்கு குறுக்கே நிற்பது முற்போக்கு சக்திகளிடையே ஏற்பட வேண்டிய ஒற்றுமையுணர்ச்சிக்குக் கேடுவிளைவிப்பதாகுமேயன்றி வேறில்லை.

நெசவுத் தொழிலாளர் பிரச்னையில் வடநாட்டு ஆட்சி பீடத்தாரின் போக்கு நம் மாகாண நலனுக்குப் புறம்பானதாயிருக்கிறது. ஆனால் நம்மாகாண சர்க்காரின் திட்டம் நெசவுத் தொழிலாளரின் அவல நிலையைச் சமாளிக்கக் கூடியதாய் இருக்கிறது. எனவே, மாகாணசர்க்கார்முழு உரிமையுடன் செயலாற்றுவதாயிருப்பின் டெல்லி தேவதைகளின் வரப்பிரசாதத்தை எதிர் நோக்க வேண்டிய இழிநிலையிருக்குமாயென்று கேட்கிறோம்? இப்படியே ஒவ்வொரு துறையிலும் "மத்திய ஆட்சி" பீடம் என்ற பாசிஸவெறியின் பிடிப்பில் நம் மாகாணத்தின் உயிர்நாடியைச் சிக்கவைத்து அர்த்தமற்ற வார்த்தைகளையும்வியாக்கியானங்களையும் கூறிக் கொண்டு நாட்டுப் பிரிவினையை எதிர்ப்பது என்று பைத்தியக்காரத்தனமாகவோ அல்லது வடநாட்டு பாசிஸ வெறியாட்சிக்கு மறைமுகமாக "லாவி"பாடும் துரோகப் படலமாகவோ இருத்தல் வேண்டும்.

தென்னாட்டைப் பொறுத்தவரை எந்த அரசியல் கட்சியாயினும் வடநாட்டுத் தலைமையின் தாக்கீதை எதிர்நோக்காமல் உண்மையான சுதந்தர அறிவுடன் பணியாற்றுமேயானால் திராவிடம் இதுவரை மக்களாட்சியின் அடிப்படையிலே இயங்கி யிருக்க முடியும். "ஏக இந்தியா" என்ற பித்துக்கொள்ளி வாதத்தையும்—அத்தலைமைக்குக் குனிந்து கொடுக்கும் அவல நிலையையும் எந்த அரசியல் முகாம் பின் பற்றினாலும் சரி அவர்களால் வடநாட்டு ஆதிக்கமும் குறிப்பாக பாசிஸ வெறியும், வளரும் "திருத்தொண்டை" செய்ததாக முடியுமேயன்றி தென்னாட்டு மக்களுக்குத் தூயத்தொண்டாற்றினார்களென்று கூற இயலாது.

சட்டசபைத் தேர்தலிலே பிற்போக்கு காங்கிரஸ் முகாமை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட பிரஜா கட்சியின் தலைமைப்பீடம் டெல்லியிலே—ஆனால் அத்தலைமைப் பீடம் இன்று முற்போக்கு சக்திகளின் ஒன்றுபட்ட தன்மைக்குச் செய்துள்ள துரோகமும் அதே சமயத்தில் தேசியப் போர்வையாளர்களின் ஆதிக்கம் அசையாதிருக்க முட்டுக்கொடுக்கும் பித்தலாட்டப் போக்கையும் மக்கள் அறிந்து வருகின்றனர். எனவேதான் தமிழ்நாட்டுப் பிரஜாகட்சி டெல்லித் தலைமைபீடத்துக்கு உட்பட்டிருக்க மாட்டோம் என்று பகிரங்கமாகக் கூறிவிட்டது.

இந்தியத் துணைகண்டத்திலுள்ள ஒவ்வொரு மாகாணத்தின் உரிமையை, "போலி தேசபக்தி" என்னும் போர்வையில் புகுந்து—சூறையாடி வருகிறது டெல்லி ஆதிக்கம். பஞ்சாப், வங்கம், அஸ்ஸாம், மகாராஷ்டிரம், (திருவிதங்கூர், கொச்சி, மைசூர் ஐதராபாத் சென்னை மாகாணம் உள்பட) தென்பகுதி ஆகிய இப்பெரும் பாகம் டெல்லி ஆதிக்க தர்பாரை எதிர்த்து வருகிறதென்றால் மிகையாகாது. எனவே இப்பேர்ப்பட்ட பிரச்னையை, சாதாரணமாகக் கருதுவது போல பாசாங்குப் செய்வதானது, இறுதியில் பெரும் கொந்தளிப்பையே உண்டாக்கும் என்பதை ஆதிக்கக்காரர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

ஏகாதிபத்தியத்தில் ஊறிக்கிடப்பவர்களும் அவர்களின் அடிமைகளுந்தான் பிற்போக்குக் குட்டையில் நீந்தி விளையாடுகிறதென்றால், முற்போக்குக் கொள்கையே எங்கள் பிறப்புரிமை யென்று கூறிவரும் கம்யூனிஸ்டுகள்—அதுவும் ஒவ்வொரு மாகாணத்தின் பொருளாதார விடுதலையைப் பறிக்கும் இக்கொடுமையை எதிர்ப்பதை விட்டு, முற்போக்கு சக்திகளுடனே மோதிக்கொண்டிருப்பது மிகமிக வருந்தத்தக்கதாகும்.

"திராவிடம்" தொல்காப்பியத்திலிருக்கிறதா? இலக்கியச்சான்று உண்டா?என்ற கேள்விகளை கம்யூனிஸ்ட் தலைவர்கள் கேட்கின்றார்களாம்! உண்டு என்பதற்குப் போதிய ஆதாரங்களைக் காட்ட முடியுமெனினும், நாம் அந்த ஆராய்ச்சியிலே கூட இறங்கவில்லை.

ஆனால் இவ்வாறு கேட்டு, தங்களைப் பெரிய மேதாவிகள் என்று கருதிக் கொள்ளும் யாராயினும் அவர்களை ஒன்று கேட்கிறோம். கம்யூனிஸம், லெனினிஸம், மார்க்கிஸம், தேசிய இனங்களிஸம் இன்னும் இதுபோன்ற "இஸங்கள்" எல்லாம் தொல்காப்பியத்திலோ, இலக்கியங்களிலோ யிருக்கிறதா? அவ்விதம் இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்துத்தான் கம்யூனிஸ்டுகள் இந்த 'இஸங்களை'ப் பின்பற்றுகிறார்களாயென்று பணிவன்புடன் கேட்கிறோம்.

எனவே, அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல நமது கம்யூனிஸ்டு தோழர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையை எதிர்ப்பது குறிப்பாகத் தென்னாட்டிலும், பொதுவாக இந்தியத் துணைகண்டத்திலும் ஏற்பட யிருக்கும் அரசியல் மறுமலர்ச்சியைத் தடைப்படுத்துவதாகவே முடியும்.

திராவிடநாட்டுப் பிரிவினையால் வடநாட்டு ஏகாதிபத்திய பொருளாதார வேட்டைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமேயன்றி கம்யூனிஸ்ட் கொள்கைகளுக்கு இதனால் என்ன இடையூறிருக்க முடியும்?

ஆகவே, இந்தியத் துணைகண்டத்தின் உண்மையான விடுதலைக்கு முதற்படியாக தென்னாட்டிலே மக்கள் ஆட்சியை நிறுவுவோமாக. அதற்கு இன்றியமையாத மருந்து நாட்டுப் பிரிவினையேயாகும். இப்பிரச்சினை தீராத வரை தென்னாட்டில் மட்டுமல்லாமல் இந்தியத் துணைகண்டத்தின் வேறெந்த பாகங்களிலும் மக்களுக்கு நிரந்தரமான நல்வாழ்வோ அதற்கேற்ற ஆட்சியோ அமைய முடியாது என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களே—நமது இலட்சிய கீதம் மாற்றுக் கட்சியினரில் பெரும்பாலோரைத் திருத்தச் செய்துவருகிறது. இதற்காக திராவிட இயக்கம் பட்ட கஷ்ட நஷ்டங்கள் ஏராளம். எனினும் எதிர்காலத்திலே இதைவிட கடுமையான தொல்லைகள், அநீதிகள், ஆதிக்கக்காரர்களால் விளைவிக்கப்படலாம்.

எனினும் அடிக்கடி நமது அண்ணா அவர்கள் ஆறுதல் கூறுவதை மனதில் கொண்டு தீவிரப் பணியாற்றுவீர்களாக.

அந்த ஆறுதல் மொழி என்ன? "எதையும் தாங்கும் இதயமுண்டு—இப்படைத் தோற்கின் எப்படை ஜெயிக்கும்" என்பதே.

நம் இயக்கத்தின் மகத்தான—தூய்மையான சக்திக்கு இடையிடையே தடைகளும் தொல்லைகளும் ஏற்பட்டாலுங்கூட இறுதி வெற்றி நிச்சயம் உண்டு. உலக அரசியல் வரலாறுகள் காட்டும் இப் படிப்பினையை டெல்லி ஏகாதிபத்தியம் உணரும் நாள் நெருங்கி வருகிறது. எனவே ஏறு-முன்னேறுவீராக!

வாழ்க திராவிடம்

—என். வி. என்.

---

முக்கிய அறிவிப்பு.

## அடுத்த வாரம் முதல்

'திராவிடன்' இதழில் அரிய கட்டுரைகளை வழங்கி, முற்போக்கு எண்ணம் கொண்டோரின் உள்ளத்தைக் கவர்ந்துள்ள

தோழர். இரா. இளஞ்சேரன்

தீட்டியுள்ள

**" மலையாள இலக்கியம் "**

என்னும் தொடர் கட்டுரை 26-9-52 முதல் தொடர்ந்து வெளிவரும்.

**சரித்திர சம்பவங்களை அள்ளியூட்டும் கருத்து விருந்து**

★

"வண்ணக் குமரி" "பட்டினித் தோட்டம்" ஆகிய தொடர் கதைகளை 'திராவிடன்' வாயிலாக அளித்து உங்களின் பேராதரவைப் பெற்றுவரும்

தோழர். இளங்கிரன்

தீட்டியுள்ள

**" இலட்சியக் கனவு "**

(என்னும் தொடர் கதை)

26-9-52 முதல் தொடர்ந்து வெளிவரும்.

**திடுக்கிடக்கூடிய நிகழ்ச்சிகள் !**

**விறுவிறுப்பான நடை! திகட்டாத கருத்துக் குவியல்!**

—நிர்வாகி, திராவிடன்.

---

## கழகத் தோழர்களுக்கு

★

வணக்கம், கடந்த ஒன்றரை மாத காலமாக கழகத் தேர்தல், சென்னை நகரசபைத் தேர்தல், குன்றத்தூர் வழக்கு ஆகிய பணிகளில் ஓய்வின்றி ஈடுபட்டிருந்தமையால் ஒப்புக்கொண்ட வெளியூர் கூட்டங்களுக்கு சரிவர வந்து பணியாற்ற இயலவில்லை. அதேபோன்று கடிதம் வரைந்துள்ள தோழர்களுக்கும் உடனுக்குடன் பதில்வரையவும் இயலவில்லை, எனவே சம்பந்தப்பட்ட தோழர்கள் இது பற்றி மன்னிக்க வேண்டுவதுடன் ஏற்கனவே யான் ஒப்புதல் அளித்துள்ள கழகக் கூட்டங்களுக்கு செப்டம்பர் முதல் வாரத்திலிருந்து கலந்து கொள்கிறேன். மன்னிக்கவும்.

அன்புள்ள,

என். வி. என்.

---

## தோழர் திருநாவுக்கரசு

42-வது வட்டத்தில் போட்டியிடும் தோழர் திருநாவுக்கரசுக்கு நகர மக்கள் கூட்டணியின் திட்டத்தை ஒப்புக் கொண்டு உறுதியளித்திருப்பதால், நகர மக்கள் கூட்டணி தனது ஆதரவைத் தருவதென்று முடிவு செய்திருக்கிறது.

வரலாற்று ஓவியம்

# இன்ப உலகு

உடுமலை பே. குருவன்

'துரோகியே! உன் தோகை மயிலாளைத் துடிதுடிக்க விட்டு, துயின்ற நேரத்திலே ஓடிவிட்டாயே உன்மத்தனே எனத் தூற்றுகிருயா? சே...சே...நீ தூற்ற மாட்டாய் நீ நல்லவளாயிற்றே. நான் என்ன செய்வேன், கூண்டுக் கிளியாக இருந்ததன் விளைவுதானே இது!'

## இன்ப மாளிகை

கனிகுலுங்கும் மாங்கள்! மணத்தைக் காற்ருேடு கலக்கிக் கொண்டிருக்கும் பல்வகை மலர் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கும் பூந்தோட்டம். பன்னீர்போன்ற தடாகம் அதிலே அல்லியும் தாமரையும் அழகை மிகுதிப்படுத்திக் கொண்டிருந்தன. ஓர் புறத்திலே பளிங்கு மேடை அதன் மருங்கே பொன்னூஞ்சல்! இவைகளுக்கிடையே மணிமாளிகை. மணிமாளிகையினின்று வெளிவந்து கொண்டிருந்த நறுமணம் உள்ளே நுழையும் மலர் மணத்தைத் தடுத்தது!

உள்ளே உள்ளத்தை உருக்கும் பொற்சிலைகள். வண்ண ஓவியங்கள். மணிகள் இழைக்கப் பெற்ற மஞ்சங்கள். மஞ்சம் ஒன்றிலே மங்கை நல்லாள் ஒருவள் மலர்ந்திருந்தாள் பொன் மஞ்சத்தில் கிடத்திய பொற்சிலையென. அவ்வழகியை, தந்தப்பதுமையன்ன பாவையர் சூழ்ந்திருந்தனர். ஓர் புறத்திலே மெல்லியலாள் ஒருவள் செங்காந்தள் விரல்களை யாழின் நரம்புகளின் மேல் தூவி, அசைத்துக் கொண்டிருந்தாள். இசை இன்பம் கிளம்பிற்று! காற்றிலே தவழ்ந்தது. 'இன்பம்...இதுவே இன்பம்...என் இதய வீணையை மீட்டும் பொன்னுன நாளிதுவே! ஆ...ஆ...குயில் குரலால் இசைத்துக் கொண்டிருந்தாள். வண்ண அரங்கிலே தோகை மயிலென, அல்லிக் கண்கள் மின்னிட, மெல்லிய இடையே நெளித்து வல்லி ஒருவள் வளைந்து ஆடிக்கொண்டிருந்தாள். இன்பம்...ஆ...என மீண்டும் ஒலி அலைகாற்றிலே தவழ்ந்தது. மங்கையர் சூழ்ந்துள்ளனரே; அல்லி அரசா? எனக் கேட்கத் தோன்றும்! அல்ல!

தனிமஞ்ச மொன்றில் கட்டிளங்காளை ஒருவன் இசையைத் துய்த்துக் கொண்டிருந்தான். அழகோவியம் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான். அரசனுகத்தானிருக்க வேண்டும். இல்லை! எதிர்கால அரசன். கலை பயின்ற காளை. இவ்வின்ப உலகிலே துன்பமே இன்னதென்றறியாது, உலகை உணராது, இன்பத்திலே மூழ்கிக் கிடந்தான். யார் இந்தக் கேளிக்கைக்காரன் எனக் கேட்கத்தோன்றும். கேளிக்கைகளிலே உள்ளத்தை பறிகொடுக்கும் இளம் பருவந்தான். ஆனல் தேடிக் கொடுத்தது யார்?

தேடிக் கொடுத்தது வேறு யாருமல்ல வைசாலி நாட்டின் கோமான், மன்பதை காக்கும் மன்னன் சுத்தோதனன்; தன் மகனுக்காக நிறுமித்த இன்பஉலகு. கோடைகாலத்திற்கென ஒன்று, கார் காலத்திற்கென மற்ருென்று இளவேனிற்காலத்திற்கென இன்னென்று ஆக மாளிகைகள் அமைத்துக் கொடுத்தான். ஏன்? தன் மகன் இன்ப உலகிலேயே இருக்க வேண்டுமென்ற பேரவா! ஆனல் அந்த ஆவல் தூள் தூளாகி விடவில்லை; மெல்ல மெல்ல உள்ளத்தை உடைத்துக் கொண்டு வந்ததென்னலாம்.

சுத்தோதனன்—வைசாலி நாட்டின் மன்னன் தன் மகனைத் தக்க வயதிலே கலைபயில ஏற்பாடு செய்தான். அவன் எதிர்கால 'பலன்களை' சோதிடர் கணிக்காமலில்லை. இருப்பினும் ஏதோ ஓர் புரோகிதன் சொல் கேட்டு, இன்ப உலகில் குடிபுக ஏற்பாடு செய்தான். வெளி உலக அறிவு இல்லாமல் ஆக்கும் பணியாக இது முடிந்தது. சோதிடத்தின்படி "எதிர்காலத்தில் மன்னனுக விளங்கமாட்டான்; துறவியாகத் திரிவான்" என்று யாரோ ஒரு வஞ்சகப் புரோகிதனின் சொற்களை நம்பினன். அதன்படி மகன் மன்னனுக வேண்டும். இல்லற இன்பத்திலேயே என்றும் ஈடுபடவேண்டும் என்ற பேரவல் காரணமாகப் புரோகிதன் எண்ணப்படி இத்தகைய ஏற்பாடு செய்தான். இவனல் அமைத்துக் கொடுக்கப்பட்ட இன்பமாளிகையில் தான் மகிழ்ச்சியைப் பெருக்கிக் கொண்டிருந்தான்; இளவரசன். உலவுவதிலிருந்து உறங்கும் வரைக்கும் இன்பத்தை நாடி எங்கும் செல்ல வேண்டிய இன்றியமையாமை இல்லை. எதை நினைத்தும் கனவு காணவேண்டியதில்லை. இன்பம் எங்கே இருக்கிறது என்பதைக் காட்டினல் ஓட்டிவரும் ஆற்றலுள்ளவர்கள் உண்டு!

அவ்விளைஞன்—சித்தார்த்தன் கலை பயிலுங்காலை நாட்டின் நிலை என்ன? எங்கும் புரோகிதர் தம் யாக குண்டத்தினின்று வேள்விப்புகை. அக்குண்டங்களுக்குப் பலியாகும் ஆடுமாடுகள் 'காட்டுமிராண்டிக்' குணம் படைத்த மத வெறியர்கள், "பர்ணசாலை, தர்ம சத்திரங்கள், வேள்விச்சாலைகள் வைத்து ஆரியத்தைப் பரப்பிக் கொண்டிருந்த காலம். எதிர்காலம் அவ்விளைஞன் சித்தார்த்தனை நம்பி யிருந்தது. மக்கள் இளவரசனின் நல்ல தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த காலம். ஏன்? மகாவீரர் பரப்பிய சைன மதம் மலர்ந்து மணம் பரப்பி மக்களின் அறியாமையைப் போக்க, அறிவுக் கண்களைத் திறக்க முயற்சியை உருவாக்கிக் கொண்டிருந்த காலம். நான்கு வேதங்கள் நாட்டப்பட்டு 'மனுதர்ம சாத்திரம்' அரசோச்சிய காலம்.

மகாவீரர், இப்பாழ்படுத்தும் இந்து மதத்தைச் சீர்திருத்தக் கிளம்பினர் யாகத்தின் பேரால் கொலைகளை ஒழிக்க வேண்டுமென்கிறர் வேதங்களின் முடிவுகள் தவறு என்று கூறினர். அவர்தம் கூற்றுக்கள் ஊற்றெனப் பெருக்கெடுத்து விடும் என்று அஞ்சிய ஆரியர்கள் 'ஐந்தாம்படை' வேலைகள் சூழ்ச்சி அனைத்தையும் கையாண்டு வந்தனர்.

ஆகவே மக்கள், எதிர்கால இளவரசனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். மன்னனே சித்தார்த்தனுக்கு ஏற்ற வயதில் திருமணம் முடித்து "இன்ப உலகை" அமைத்துக் கொடுத்து வெளியுலகைப் பார்க்காமல் தடை செய்து வந்தான். வெளியுலகைப் பார்த்தால் மனம் மாறிவிடுமாம். ஏன் மனம் மாறிவிடும்? மக்கள் மன்னன் பணியை எதிர்ப்பார்த்தனர் புரோகிதக் கூட்டமோ, மக்கள் மன்றத்திலே மன்னன் உலவக் கூடாது என எண்ணியது. மன்னன், மகாவீரர் தம் அறக் கொள்கையில் ஆழ்ந்து விட்டால்; ஆரியம் அழிவை அணுகி நேரிடும். தம் இன்ப விளக்கு அணைந்து விட்டால் வாழ்வு......? ஆகவேதான் மக்கள் மன்றத்தை மறக்கும்படி செய்யப்பட்டான் இளவரசன் சித்தார்த்தன்.

மக்களை மறந்தான் சிறிது காலம்...அந்த நேரம்தான் இன்ப வல்லிகளின் பாடலிலும், ஆடலிலும் மகிழ்ந்திருந்தான்! மஞ்சத்தில் அவன் மனைவி தான் சாய்ந்திருந்தாள். பொன்னிற மேனியில் மாந்தளிர் வண்ணம் பரவியிருந்தது: நெடுவிழிகளிலே கனிவு—தாய்மையின் பொலிவு; குடிகொண்டிருந்தது. இன்ப மதலை—அவர்கள் இன்பத்தின் தோன்றல்—வாழ்வின் புத்தமிழ்து—இளங் குழந்தையை எண்ணிக் கொண்டிருந்தாள். அவள் கருவுற்றிருந்த நிலையில் அவள் உள்ளத்தே இன்ப எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன.

## உரையாடல் :—

இசை இன்பத்திலே மூழ்கியிருந்த சித்தார்த்தன், சரேலென எழுந்தான். வெளியே சென்ருன். இன்னிசை நிறுத்தப்படவில்லை. தொலைவில் யாரோ வருவது தெரிந்தது. சித்தார்த்தனின் நண்பன் உதயன்தான். இளவரசனை அணுகினன். இருவரும் தடாகம் நோக்கிச் சென்றனர். உரையாடல்கள் வளர்வதாயிற்று.

உதயன்:— நண்ப, நாடு தங்கள் நற்பணியை எதிர்நோக்கி, ஆவலோடு இருக்கிறது. தாங்களோ இன்பத்திலேயே ஊறிக் கிடக்கின்றீர். மகாவீரர் தம் கொள்கைகளை, நடைமுறைக்குக் கொண்டுவரத் தாங்கள் முயன்ருல் இந்த நாட்டின் இழிவு அழியும். ஆரியம் அழிந்தால், வேள்வியும்—புலால் நாற்றமும் நீங்கும். உலகம் தங்களைப் போற்றும்.

சித்தார்த்தன்:—உம்......நானும் இதைப்பற்றித்தான் சிந்தனை செய்கிறேன். கேளிக்கைகள் எனக்கு வெறுப்புத் தட்டுமளவுக்குச் சென்றுவிட்டது. அளவுக்கு மிஞ்சிய அமிழ்து!

உதயன்:—ஆம் நண்ப! புரோகிதக் கூட்டம், மக்கள் மன்றத்திலே தாங்கள் தோன்ற சிறிதும் விரும்பவில்லை. அதன் விளைவுதான் தாங்கள் அந்தப்புரத்திலே அடைப்பட்டுக் கிடப்பது. வெளியிலே சென்று நாட்டைச்சுற்றிப்பார்த்தால் உண்மை விளங்கும். எங்கிருந்தோ வந்த நாடோடிக் கூட்டம் காவி, கமண்டலம், புல், பூணூல் ஆகியவற்றின் துணைக் கொண்டு, ஆட்டிப்படைக்கிறது நாட்டை. இந்நிலை இன்னும் நீடிக்க வேண்டுமா?

சித்தார்த்தன்:—நான் இவையெல்லாம் விரும்புகிறேன் என எண்ணுகிருயா? வெறுக்கிறேன் ஆரியர் தம் வேள்விகளை; அவர்தம் இந்து மதத்தை.

உதயன் :— நால் வருணம் தான் அவர்கள் திட்டம். அதன்படி தானே நாடும் இருக்கிறது. வேதங்கள், ஸ்மிருதிகள் இதைத் தானே கூவுகிறது. அவர்கள் மத அகராதிப்படி நாம் சத்திரியர்கள்-அரசாளப் பிறந்தவர்கள் தாம். ஆனல் சூத்திரர்கள்தானே! புரோகிதரைத் தவிர்த்து யாரும் மந்திரியாக வருதல் கூடாது. அப்படியே வந்தாலும் நாடு பல்வகை நோய்களால் பீடிக்கப்பட்டு அழியும்; என்றுதானே எழுதி வைத்துள்ளனர்.

சித்தார்த்தன் :— ஆம்! இதை ஒழிக்கத்தான் வேண்டும்: என் நாளில் இந்த நற்பணியை செவ்வனே முடிக்க விழைகின்றேன்.

"இளவரசியார் அழைக்கிருர்கள்" என்று சேடியொருவள் கூறினள். உதயனிடம் மறுமொழி பெற்றுக் கொண்டு மாளிகையுள் நுழைந்தான்.

## இரவில்

இயற்கையன்னை இருட் கணவனை அணைத்தாள், நீலவான் கருவுற்றது. பொன்னிலா உயிர் பெற்று வளர்ந்து முத்துச் சுடரொளியைப் பெற்றுக் கதிரை உமிழ்ந்தான். முகில் கூட்டம் அவ்வொளியைப் பெற்று, வெள்ளிப் பனிமலைகளாக மிதந்தது. தடாகத்திலே வெள்ளிக் காசுகள் மிதந்து கொண்டிருப்பது போன்றிருந்தது நிலவொளி பட்டதால். அதன் மருங்கில் பளிங்கு மேடையில் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் சித்தார்த்தன். நிலாவைப் பார்த்தான். அவன் துணைவியின் முகம் தோன்றவில்லை. களங்கம்தான் தென்பட்டது. நாட்டின் களங்கம்...மனக்கண் முன் தோன்றிக் கொண்டிருந்தது. தடாகத்திலே தாமரைகள் தலை தாழ்த்தி நின்றிருந்தன. அவைகளிலே தன் அழகு மனைவியின் எழில் தோன்றவில்லை. நாட்டு மக்களின் வாட்டமே தென்பட்டது, "கிள்ளையைக் கூண்டிலேயடைத்து, பாலும், பழமும் கொடுத்து, அழகு பார்ப்பது போலல்லவா என் தந்தையும் என்னை இன்ப மாளிகையிலே அடைத்து வைத்து அழகு பார்க்கிறர். கூண்டிலேயிருந்து விடுதலையடைந்து வெளியேறினுல், இன்பமாகப் பறந்து திரியலாம். எனக்கு என்று விடுதலை? ஏன் தந்தை இந்நிலையிலே

10-ம் பக்கம் பார்க்க

சர்வதேச இலக்கிய வரிசையிலே
ஒரு பொன் ஏடு

★ புதுமையான கருத்துப் பின்னல்!
★ வாழ்க்கையின் பிரதிபலிப்பு
★ சலிப்புத் தட்டாத சம்பவங்களின் மோதுதல்

— இவை —

நரக வாசலில்

ரா. தணலன் எழுதியது.

அழகிய மூவண்ண முகப்புடன் கூடிய கவர்ச்சிகரமான சிறந்த பதிப்பு

விலை ரூ. 1-8-0 விற்பனைக் கழிவு 25%

விபரங்களுக்கு:—

எரிமலைப் பதிப்பகம்

துறையூர் : : திருச்சி

# வேல்ஸ் தரும் விளக்கம்!

தில்லை மறைமுதல்வன் ★

“உலகமே சிறை! உலக பந்தங்களே சிறைக் கம்பிகள்!......... என்று உபதேசம் புரிபவருக்கு மாடமாளிகைகளும் எடுபிடிகளும் ஏன்? பொருள்மீது இச்சை வைக்காதே என்று கூறுபவருக்கு காதிலே வைரக் கடுக்கனும், உடலில் பட்டுப் பீதாம்பரமும், காலிலே பொற்பாதக் குறடும் ஏன்? பெண்களெல்லாம் மாயை என்று பகலில் உபதேசம் புரிபவர் இரவில், உடலைக் குலுக்கி ஊரை அழிக்கும் உல்லாசிகளுடன் பள்ளியறையில் கொஞ்சிக் கிடப்பது ஏன்?......

‘நீ ஒரு நாஸ்திகன்!’

‘ஏழை மக்கள் இடமில்லாமல் ஏங்கித் தவிக்கையில் ஆண்டவனுக்கு அத்தனை பெரிய ஆலயமேன்? பசியால் பச்சைக் குழந்தைகள் பதறியழும்போது பரமனுக்கு பாலாபிஷேகம் ஏன்?...’

‘நீ ஒரு நாஸ்திகன்!’

‘ஏதாவது ஒரு பொருள் இருந்தால் அதை உருவாக்கிய ஒருவனும் இருக்க வேண்டும். ஆகவே, இந்த உலகையும், உலகிலுள்ள மக்களையும் படைத்தது கடவுளானால் அக்கடவுளைப் படைத்தது யார்?

“நீ ஒரு நாஸ்திகன்”

மதம் கூறும் எதையும் அப்படியே நம்பாதே. சிந்தித்துப்பார் உன் பகுத்தறிவிற்கு சரி என்று பட்டதையே ஒப்புக்கொள்!

‘நீ ஒரு நாஸ்திகன்’

கடவுளை நோக்கி எதற்கும் வரம் கேட்காதே. உன்னால் முடிந்த அளவு உழை! உழைப்பின் பயனையே அனுபவி!

‘நீ ஒரு நாஸ்திகன்!’

—இப்படி, பகுத்தறிவு வாதிகள் எழுப்பிய ஒவ்வொரு கேள்விக்கும், எடுத்துக் கூறிய ஒவ்வொரு கருத்துக்கும், மதவாதிகள் “நீ ஒரு நாஸ்திகன்” என்ற பதிலையே பட்டமாக்கி யிருக்கின்றனர்!

தன்னைத்தானே சிந்தித்தறிந்து, தான் அறிந்ததை அவனி முழுவதும் அறிய ஆசை கொண்டு, தணியாத அறிவு வேட்கையால் தவித்துக் கொண்டிருந்தவர்களின் இதயத்தை தொட்டு, அவர்கள் மனதில் மண்டிக் கிடந்த இருளை தன்னுடைய அறிவுக் கதிர்களால் கிழித்து, அதற்காக வீணர்கள் தந்த விஷக்கோப்பையை சிரித்தோடு முத்தமிட்ட சான்றோன் சாக்ரடீஸ் காலத்திலிருந்து இன்று வரையிலுங்கூட சீர்திருத்தவாதிகள் மீது “நீ ஒரு நாஸ்திகன்” என்ற அந்த ஒரு சொல்லையே வீசி வந்திருக்கின்றனர்!

ஏன்? புதுமையைக் கண்டு மருட்சி! மக்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டால், தங்கள் சுகவாழ்வின் அஸ்திவாரம் ஆட்டங்கொடுத்து விடுமே என்ற பயம்! பகுத்தறிவுடன் மக்கள் ஆராய்ந்தால் தங்கள் சூழ்ச்சி திட்டங்கள் ஏமாற்று வழிகள் சுக்கல் சுக்கலாக உடைக்கப்பட்டு விடுமே என்ற கலக்கம்! ஆகவேதான் புதுமையாளர்களைக் கண்டு பகுத்தறிவு வீரர்களைக்கண்டு சிந்தனை செய்த சீர்திருத்த செம்மல்களைக் கண்டு பயந்தனர் பழமையின் பாதம் தாங்கிகள்! அதை மறைக்க ‘நீ ஒரு நாஸ்திகன்’ என்ற சொல்லை வீசினர். அதன் மூலம் புதுமையாளர்களை அடக்க முயன்றனர்!

“நீ ஒரு நாஸ்தீகன்” இதுதான் பழமைவாதிகளின் அதாவது மதவாதிகளின் பலமான ஆயுதம்! இந்த ஆயுதத்தைக் கொண்டே தங்கள் எதிர்ப்பு சக்திகளை யெல்லாம் நசுக்கி விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர்! ஆகவேதான் எந்த விதமான எதிர்ப்புக்குமே ‘நீ ஒரு



நாஸ்திகன்’ என்ற சொல்லை வீசி விடுகின்றனர்!

ஆனால் உண்மையிலேயே நாஸ்தீகன் என்பவன் யார்? ‘நாஸ்தீகம்’ என்ற சொல்லின் பொருள் என்ன? பகுத்தறிவாளர்களெல்லாம் நாஸ்திகர்களா? மதத்திற்கு மாறுபட்ட கருத்துக்களை கொண்டவர்கள் நாஸ்தீகர்களா? கடவுள் இல்லை என்று கூறுவோர் நாஸ்தீகர்களா?...இந்த கேள்விகளுக்கெல்லாம் விடைகாண வேண்டியது மிகவும் அவசியம்!

டாக்டர் வேல்ஸ்—உலக அறிஞர்களால் போற்றப்படுபவர்! சிறந்த மேதை புகழ்பெற்ற அறிவாளி ஹக்ஸ்லி போன்ற அறிஞர்களால் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படும் கருத்துக்களைக் கொண்டவர்! ...அவர் கூறுகின்றார் “நாஸ்திகன்” என்ற சொல்லுக்கு விளக்கத்தை—கேளுங்கள்......

“நாஸ்தீகன் என்ற சொல் விரும்பத்தகாத முறையில் வழங்கப்படுகிறது. அதாவது, மதத்திலே பற்று கொண்டவர்கள் அம்மதத்திற்கு மாறான கருத்துக்களை கொண்டவர்களை இழிவுபடுத்தும் ஒரே காரணத்துக்காக ‘நாஸ்தீகம்’ என்னும் சொல்லை சூட்டுகிறார்கள்! அது ஒரு வசை மொழியாகக் கற்பித்துக் கொண்டிருப்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் உண்டு என்று நம்புவதை வேறு யாராவது இல்லை என்று மறுப்பது அக்கிரமம் என்பது அவர்கள் கருத்து! ஆகவே, ஒருவனை நாஸ்தீகன் என்று கூறினால் அவன் நன்னெறியற்றவன் என்று பிறர் கருதவேண்டும் என்பது அப்படிக் கூறுபவர்கள் கருத்து!

சில காலத்துக்கு முன் நாஸ்தீகர் என்று கூறப்பட்டவர்கள் சமுதாய பிரஷ்டர்கள் என்றுகூட மதிக்கப்பட்டனர். அதற்கும் சில காலத்திற்கு முன் நாஸ்தீகர் என்று தூற்றப்பட்டவர்களை அரசர்கள் கொடுமை செய்து வந்தனர். அதற்கும் நீண்ட காலத்திற்கு முன் நாஸ்தீகர் என்று கூறப்பட்டவர்க்கெல்லாம் சித்திரவதையும் மாரணதண்டனையுமே பரிசளிக்கப்பட்டு வந்தன!

ஆனால் இப்போது அந்த நிலைமை முழுவதும் மாற்றம் அடைந்துவிட்டது என்றாலுங் கூட. சாதாரண மக்களால் மதம் என்று கூறப்படுவதை மறுப்பவர்களை யெல்லாம் தூற்றி, சமுதாயப் பிரஷ்டர்களாகக் கருதுவதும், அறிவு வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் தடைகளை ஏற்படுத்தி வைதீகத்துக்கு ஆதாவளிப்பதுமாக இருந்து வருவது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது!...

வேதங்களெல்லாம் தேவவாக்கென்றும், வேதங்களை மறுப்பது கடவுள் இல்லை என்று மறுப்பதற்கு சமானமாகும் என்றும் மக்கள் பொதுவாக கருதியிருக்கும் நம்பிக்கையே, சாமான்ய மதக்கோட்பாடுகளை மறுப்பவனைக் கூட நாஸ்தீகனென்று பழிக்கப்படுவதற்கு மூல காரணமாயிருக்கிறது. ஆனால்வேதங்களெல்லாம் தெய்வத்தின் சொந்த வாக்கென்று நம்புவது நாஸ்தீகனுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது!

ஆகவே நாஸ்தீகன், கடவுள் வார்த்தைகளையாவது, கடவுள் கட்டளைகளையாவது மறக்கவில்லை என்பதும், மனிதனுடைய வார்த்தைகளையும் கட்டளைகளையும் மட்டுமே தான் அவன் மறுக்கிறான் என்பதும் சிந்தித்துப் பார்த்தால் தெளிவாக விளங்கும்!

எல்லா சக்திகளையும் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையையும்—எல்லாவற்றையும் அறியும் சக்தினையும் உடைய. கடவுள் என்பதாக ஒன்று உண்டென்று நம்பிய அறிந்த எவனும் அப்படிப்பட்ட கடவுள் ஒன்று இல்லையென்று மறுக்க முன் வரவேமாட்டான். இதை ஒவ்வொருவரும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அப்படிப்பட்ட கடவுளை இல்லை என்று மறுப்பதால் அவனுக்கு என்ன லாபம்? கடவுள் தண்டனையை அலட்சியம் செய்தாவது இப்படிச் சொல்ல வேண்டும் என்கிற அவசியம் அவனுக்கு ஏன் வந்தது?

அதுமட்டுமல்ல, வேதங்களெல்லாம் கடவுளால் கூறப்பட்டவை என்று மனப்பூர்வமாக அறிந்த எவனும்— சந்தேகத்திற்காகவாவது ஆளான—எவனும் “வேதங்கள் கடவுள் வாக்கல்ல” என்று மறுக்கவும் துணியமாட்டான்.

வேதங்களெல்லாம் தெய்வவாக்கு என்று கூறுவதற்கு வெறும் குருட்டு நம்பிக்கையும், பலாத்காரமுமே ஆதாரமாக இருக்கிறதே ஒழிய எந்த விதமான ருசுவோ, உண்மையான ஆதாரமோ கிடையாது!

எனவே ஆஸ்தீகனுக்கும் நாஸ்திகனுக்கும் உள்ள வேறுபாடு என்ன? என்பதை சிந்தித்துப் பார்த்தால் விஷயம் விளங்கும். முதலாவதாக ஆஸ்தீகன் புராணங்கள் கூறுபவைகளை யெல்லாம் உண்மை என்று நம்பவேண்டு மென்கிறான். நாஸ்திகன் அவைகளை அப்படியே ஒப்புக்கொள்ள மறுக்கிறான். இவ்வளவு தான் ஆஸ்தீகனுக்கும் நாஸ்தீகனுக்கும் உள்ள உண்மையான வித்தியாசம்!

ஒருவன் ஒன்றை உண்டென்று நம்புவதாலேயே உயர்ந்த நெறியுடையவனாக ஆகிவிடமாட்டான். அதுபோலவே இல்லை என்று மறுப்பதாலேயே ஒருவன் நெறிகெட்டவனுமாகிவிட மாட்டான்! ஏனென்றால் நம்பிக்கையும் அதனதன் உண்மையைப் பொருத்திருக்கிறது!

வேதங்களெல்லாம் கடவுள் வாக்கென்று எண்ணி ஆஸ்தீகன் அவைகளை நம்புகிறான் என்றாலுங்கூட, யாரோ ஒரு சிலர், “வேதங்களெல்லாம் கடவுள் வாக்கு” என்று கூறியதை நம்பித்தான் அவனும் வேதங்களை கடவுள் வாக்கென்று நம்புகின்றானே ஒழிய தனக்கு தேவையான ஆதாரங்களெல்லாம் கிடைத்துவிட்டது என்ற காரணத்தினால் அல்ல!

ஆனால் அவன் அந்த விஷயங்களை யெல்லாம் சற்று கவனமாக ஆராய்ந்து பார்த்தால், வேதங்கள் கடவுள் வாக்கென்று கூறுவது ‘கடவுள் அல்ல’ என்பதும், வேதங்களுக்கும் கடவுளுக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை என்பதும் அவனுக்கு நன்கு விளங்காமற் போகாது!

ஏனென்றால் என்னுடைய ஆஸ்தீக நண்பர்களில் எவருமே ஒருபோதும் கடவுளைக் கண்டதே கிடையாது! கடவுளிடமிருந்து வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ எந்தவிதமான செய்தியும் அவர்களுக்கு வந்ததில்லை!

“கடவுளின் வாய்ப்பிறப்புதான் வேதங்கள் எல்லாம்” என்பதற்கு கடவுளிடமிருந்து நேர்முகமான தெளிவு ஏதும் அவர்களுக்கு கிடையாது.

“எல்லாம் கடவுள் வாய்மொழி” என்று நம்புவதற்கு அடிப்படையாக இருப்பதெல்லாம் “ரிஷிவாக்கியங்கள்” என்பவைகளும், புராணங்கள் என்பவைகளும் கடவுள் கடாட்சம் பெற்றவர்கள் என்பவர்கள் கூறினர்கள் என்று எழுதிவைக்கப்பட்டவைகளும்தான்! ஆனால் அவை நம் கண்ணெதிரேயே மனிதர்களால் எழுதப்பட்டு, மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டதையும், அச்சிடப்படுவதையும் காண்கிறோம்!

ஏ! ஆஸ்தீக நண்பனே! வேதங்களை யெல்லாம் கடவுள், ரிஷிகளுக்கு உபதேசம் செய்ததாக கடவுள் உன்னிடம் நேரில் சொன்னது கிடையாதே! நீ பார்த்ததும் கிடையாதே! வேதங்களெல்லாம் கடவுள் வார்த்தை என்று யாரோ கூறியதைத்தானே நீ நம்பிக்கொண்டிருக்கிறாய்?

ஆனால் உண்மையில் ‘ரிஷிகள்’ யாரென்று உனக்குத் தெரியாது! வேதங்களை எழுதியவர் யாரென்றும் எப்போது என்றும் உனக்குத் தெரியாது! வேதங்களை மொழி பெயர்த்ததும் தொகுத்ததும் கூட யார் என்று உனக்கு நேரில் தெரியாது!

ஆகவே, உனக்குத் தெரியாத யாரோ சிலர் கூறுவதை ஆதாரமாகக் கொண்டு—வேதங்களை தேவவாக்கு என்று நீ நம்புகிறாய்! எனவே வேதங்கள் தேவவாக்கல்ல என்று நான் மறுத்தால் அது தேவ வாக்கை நான் மறுத்ததாக எப்படி கொள்ள முடியும்? ஒருகாலும் கொள்ளவே முடியாது! மனித வாக்கை மறுப்பதாகத்தான் கொள்ளமுடியும்!

ஆனால் நாஸ்தீகர்கள் ஏதோ கெட்ட எண்ணத்தின் காரணமாக

9-ம் பக்கம் பார்க்க

# காகிதப் படகில் குல்லுகபட்டர்!

மு. சண்முகம்

நினைத்ததைச் செய்து முடிக்க 'ஹெர்குலிஸ்' தேவன்களோ, பீமார்ஜுனக் கடவுள்களோ தேவையில்லை!

அது சாதாரண மனிதனாலும் முடியும் என்பதை மக்கள் புரிந்து கொண்டார்கள்!

பல்லாண்டு காலமாகத் தங்களை அழுத்தி வைத்து ஆட்டிப் படைத்த, 'மனிதக் குல தர்ம கர்த்தா'க்களுக் கெதிராகக் கிளர்ந்தெழுந்து, அப்படிச் செய்வதற்கு அவர்களுக்கு ஒரு சிறிதும் உரிமையில்லை என்பதை நிலை நாட்டும் போராட்டத்திலிறங்கி விட்டார்கள்.

உண்மையின் ஒளி வீச்சில், நேர்மையின் கதகதப்பில் மக்கள் ஒன்றுகூடி, எங்கள் 'விதி'யை நாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் சக்தி எங்களுக்கும் இருக்கிறது'' என்ற முழக்கத்தை மலை முகட்டிலிருந்து ஒலி கிளப்பத் துவங்கி விட்டார்கள்!

மனித சமுதாயத்திற்கு தான் நினைத்ததைச் சாதித்துக் கொள்ளும் நெஞ்சுறுதி "எப்படியோ'' வேரூன்றி விட்டது!

இனி அவர்களுக்கெதிராகக் கிளம்பி வெற்றி பெற யாராலும், எந்தச் சக்தியாலும், அது தன்னை அமானுஷிகச் சக்தியென்று அழைத்துக் கொண்டாலும் முடியவே முடியாது. நிச்சயம் முடியாது!

இது, புத்துலகப் பயணத்திற்கான போராட்ட அணிவகுப்பிலே யிருக்கும் நமக்கு மட்டுமல்ல, நமக்கு எதிராகப் போராடும் நாசச் சக்திகளுக்கும் மிக நன்றாகப் புரிகிறது; நம்மை விட, மிக அதிக அளவில்!

நம்மால் நாசச் சக்திகளை எவ்வாறு அழிக்க முடியும் என்பதைவிட, நாம் எப்படி அழிக்கப் படுவோம் என்பது அவர்களுக்கு தெளிவாகப் புரிகிறது என்பது, அவர்கள் கையாளும் ஒவ்வொரு செயலிலும் தெளிவாகத் தெரிகிறது.

அதே சமயத்தில், அவர்கள் தங்களுடைய பழைய சாதுர்யத்தையே பயன்படுத்த நினைத்து, இன்னும் கொஞ்ச நாள் தள்ளலாமே என்று நினைக்கும் மனப்பான்மையை நாம் நினைத்துப் பார்க்கும் போதுதான் நகைப்பேற்படுகிறது.

மக்கள் சக்திக்கெதிரானவர்களெல்லாம் புத்திசாலிகள்—அனுபவவாதிகள்! இதை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்!

பீறிட்டெழுந்த எத்தனையோ மனிதாபிமானப் புரட்சி வெள்ளங்களைக் கண்டவர்கள்! அவ்வப்போது, அவைகளுக்கு அணைபோட்டு ஒரு சில வெற்றியும் பெற்றவர்கள்!

அவர்களுக்குத் தெரியும் வெள்ளத்தின் குணம்! பலப்பல புரட்சி வெள்ளத்தைக் கண்டு பழக்கப்பட்டதின் காரணமாக!

எத்தனையோ முறை கரைபுரண்டோடும் வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டு இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிருக்கின்றனர்.

நீந்தத் தெரியாத காரணத்தால், திக்குமுக்காடி திணறிப் போன சம்பவங்களும் ஏராளம்!

ஆழமிருக்காது என்ற நினைப்பில், கால் விட்டு சேற்றோடு சேறாகப் புதையுண்டு போனதும் நமக்குத் தெரியாததல்ல!

ஆதிக்கக்காரர்கள், அழுத்தி வைப்பதன் காரணமாகவே உயிர் வாவேண்டிய பரிதாப நிலையிலுள்ளோர், "ஒளியிழந்த கண்ணிலுய் வா, வா வா'' என்ற மடமைக்கு லாலி பாடுவோர் இன்னும் ஏராளமாக உலகில் நிறைந்திருக்கின்றனர்.

அவர்களுடைய பரம்பரைத் திருப்பணியும் கட்டுப்பாடாக ஆனால் காலத்திற்கேற்ற திருத்தங்களுடன்—புது மெருகிடப்பட்டு, நாள் தோறும் நடைபெற்றுத்தான் வருகிறது.

திருத்தங்களை மேற்கொள்ளாமல், பழைய பாணியையே கையாளும் முகாம்களும் இருக்கின்றன. என்றாலும்,

அவைகள் உடனடியாகவே அம்பலமாகி விடுகின்றன. வேருடன் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. இதற்குதாரணமாக, சீனா, எகிப்து' தென்கொரியா, தென் ஆப்ரிக்கா போன்றவைகளைச் சொல்லலாம்:


அதேபோல ஆதிக்கமுறையை புதுமுறையுடன், மிக லாவகமாக கையாளுவதற்கு மிகச்சரியான உதாரணம், நமது சர்க்கார்—நேருவின் தலைமை! அது பிரயோகிக்கப்படும் நமது தென்னாடு! திராவிட பூமி!

இந்த அவலட்சண முறையை, விளம்பரப் படுத்தி, அமுலாக்கி, நம்மை என்றென்றைக்கும் அடிமையாக்கி வைத்திருக்க ஏஜண்டாக வேலை செய்பவர்தான் தோழர் ஆச்சாரியார்—தென்னாட்டின் பிரதமர்!

ஆச்சாரியார் ஆதிபத்தியமுறையின் நீங்காக் காவலன்! அடிமை சிருஷ்டி கர்த்தாக்களின் நேரடி வாரிசு!

இதை இவ்வளவு அழுத்தமாக நாம் குறிப்பிடுவதற்கான காரணங்களை கூடை கூடையாகக் காட்டமுடியும்! கட்டுப்பாடு ரத்திலிருந்து, எழுத்துச்சீர் திருத்தம் வரையிலே அவர் கையாண்டிருக்கும் செயல்களிலிருந்து மிகமிகப் பொருத்தமான உதாரணங்களைக்காட்ட முடியும்! அதுவும் சிறப்பாக சமீபத்தில், கைத்தறி—மில் துணி ஆகியவைகள் விஷயத்தில் கனம். கிருஷ்ணமாச்சாரியின் பேச்சுக்கு மறுப்புக் கொடுக்கும் முறையிலே அவர் நடந்து கொண்ட முறை ஒன்றைக் கொண்டே நாம் அவரைப் பற்றிக் கூறும் அவ்வளவையும் ஊர்ஜிதப் படுத்தி விடலாம்!

நமது கொள்கைகளை மற்றவர்கள் பின்பற்றட்டுமே"!



திராவிட நாட்டுப் பிரிவினைக்கு பிறரது வாதங்கள் வியாக்கியானங்கள் ஒத்து வருகிறதா என்று நாட்டுப் பிரிவினைக்கு எதிர்ப்பாயுள்ளவர்கள் ஆராய்ச்சியிலிறங்குகின்றனர். இது வீண் வேலையாகும். "திராவிட நாட்டுப் பிரிவினையின் அடிப்படைக் கொள்கையை, பாசிஸ வெறியின் பிடிப்பில் சிக்குண்டு தவிக்கும் பிற நாட்டினர் மாகாணத்தினர் பின் பற்றட்டுமே, திராவிடம் வழிகாட்டியாக அமையக் கூடாதா? —இரா. நெடுஞ்செழியன்

மேற்படி விவகாரத்தில், அவர் பேசியிருக்கும் பேச்சுக்களும், நிருபர்களுக்குக் கொடுத்திருக்கும் பதிலும், நாம் மேலே கூறியிருப்பதைப்போல, 'ஆதிக்கக்காரர்கள் புத்திசாலிகள்—அனுபவ வாதிகள்' என்பதை தெளிவாக்கிக் காட்டுகிறது.

வடநாட்டாதிக்கத்தின் பேரில் என்றுமில்லாத கசப்புணர்ச்சி தென்னாட்டிலே குமுறிக் கொண்டிருக்கிறது. "விடுதலை எப்பொழுது?'' என்ற முழக்கம் எங்கும் கேட்கிறது.

தெற்கத்தியாரிடமிருந்த கூலி மனப்பான்மை கொஞ்சம் கொஞ்சமாக இத்து வருகிறது. 'சாவதற்கு முன்னால் ஒரு நாள் வாழ்வாவது சுதந்திரமாக வாழ்ந்தச் சாவோம்' என்ற உறுதி எங்கும் ஒலிக்கிறது.

ஆதிக்கத்தின்பிடி நாளுக்குநாள் தளருகிறது! அது மீண்டும் இறுக வேண்டும்! வேறு முயற்சியாலல்ல! அப்படி முடியவும் முடியாது!

தானாகவே—தளர்ந்ததைப் போலவே!

அதற்கான வழி? —இதில்தான் தனது புத்திசாலித்தனத்தையும், அனுபவச் செல்வத்தையும் பெருத்த அளவுக்குப் பயன்படுத்துகிறார், ஆச்சாரியார்!

தெற்கில் கரையுடைத்தோடும் இன உணர்ச்சி வெள்ளத்தில் எதிர் நீச்சலடித்துப் பார்க்க விரும்பவில்லை. அதன் விளைவைப் பற்றி அவருக்குத் தெரியும், அனுபவித்திருக்கிற காரணத்தால்! நமக்கும், அவருடைய இந்த நினைப்பை ஆகஸ்ட் போராட்டம் நிரூபித்து விட்டது!

ஆகவே, வேறு முயற்சியில்—புதிதான ஒன்றில் இறங்கி யிருக்கிறார்! வெள்ளத்தில் குறுக்கே புகுந்து கரை ஏற முயற்சிக்காமல் வெள்ளத்தின் கூடவே வந்து, வேகம் குறையும் இடத்தில்—மேடு தட்டும் சமயத்தில் மறுகரைக்குச் சேர்ந்துவிட எண்ணுகிறார்.

மேடு தட்டும் வரையிலாவது அவரால் வெள்ளத்தில் மிதந்து வரமுடியுமா என்பதல்ல முக்கியம், அவரது முயற்சி அத்தகைய விதத்திலே திரும்பி யிருக்கிறது என்பதுதான் இப்போதைய நிலைமை!

"வடநாட்டு வணிகர்கள் தெற்கின் வாழ்வைப் பற்றிக் கவலைப்படாதவர்கள், அவர்கள் எவ்வளவோ சுரண்டுகிறார்கள்'' என்று பேசி, வெள்ளத்துடன் தானும் ஒட்டிக் கொள்ள முயலும் அதேநேரத்தில், அவர்களது சுரண்டலைத் தடுக்க என்ன வழி செய்தார் என்ற நமது கேள்விக்கு விடையளிப்பாரில்லை. விடையளிப்பதான எண்ணம்கூட, அதைச் சொன்னவருக்கே இல்லை.

இதற்குக் காரணம் என்ன?

சாம, பேத, தான, தண்ட உபாயங்களிலே ஒரு வகையாக இதை ஏன் சேர்த்துக் கொள்ளக் கூடாது?

தெற்கிலே, பெரும்பாலான மக்களின் வாழ்வை மய்யமாகக் கொண்டிருக்கும் கைத்தறி நெசவுக்குப் பரிந்து பேசுவதை வரவேற்கிறோம்.

ஆனால் தன்னுடைய பரிவைக் காட்ட உருப்படியான நடவடிக்கையை எடுக்க ஏன் தயங்க வேண்டும்?

மத்திய சர்க்கார் மந்திரியின் கருத்தை மிகத் தைரியமாக எதிர்த்து, பைத்தியக்காரத்தனமானது என்று சொல்லும் அளவுக்கு தனக்கிருப்பதாகக் காட்டிக்கொள்ளும் துணிச்சலை, அதே மத்திய சர்க்கார் மந்திரிகளின் தாக்கீதுகள் விஷயத்திலும் நடந்து கொள்ள ஏன் அஞ்சவேண்டும்?

கை நெசவில் ஈடுபட்டுள்ள 50 லட்ச மக்களுக்கும், மில் தொழிலில் ஈடுபட்டுள்ள 50 ஆயிரம் மக்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நன்றாக உணர்ந்து 50 லட்சம் மக்களுடையதுதான் மனிதப் பிரச்சனை என்று மழுப்பும் ஆசசாரியார். தன்னுடைய கருத்தை ஆதரிக்க 50 லட்சம் மக்கள் தயாரா யிருக்கின்றனர் என்ற வாதத்தினடிப்படையில் ஏன் மத்திய சர்க்காரிடம் போராடக் கூடாது?

ஒரே கட்சியால் இயங்கும், மாகாண மத்திய சர்க்கார்களுக்கிடையில் பூசல் நிகழ்வது கட்சியின் கட்டுப்பாட்டை மீறுவதாகும் என்ற சமாதானமும் ஏற்றுக் கொள்வதாக யில்லையே! கட்டுப்பாட்டுக்கு கவலைப்படும் கட்சியின் கொள்கை ஒரே சீராகத்தானே இருக்கும்? மத்திய சர்க்கார் மந்திரியான ஒரு காங்கிரஸ் தோழர் சொல்வதை, மாகாணப்பிரதமரான ஒரு காங்கிரஸ் தோழர் மறுப்பது என்றால், அதன் பொருள் என்ன? தெளிவற்ற கொள்கையின்றிதான் கட்சி நடக்கிறதா? அதே முறையில்தான் ஆட்சியும் நடைபெறுகிறதா?

ஆட்சி நிர்வாகத்தில், கட்சிக் கட்டுப்பாடு அவ்வளவு பெரிதில்லை என்பதுதான் அறிஞர்களின் கருத்து. ஆள முற்பட்டுவிட்டபோது, கட்சியல்ல, மக்கள்தான்—தன்னை, தன் கட்சியை மதிக்காத மற்றவன் நலனையும் உள்ளடக்கித்தான் நிர்வாக யந்திரம் செலுத்தப்பட வேண்டும்! அதிலும், இந்த பரந்த பூமிக்கு—குட்டிக் கண்டத்திற்கு ஒரு கட்சியின் கொள்கையே எல்லா இடத்திற்கும் பொருந்தாது என்பதையும் நாம் அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

தவிர தோழர். ஆச்சாரியார் பேச்சில், "எங்கள் கொள்கைக்காக நாங்கள் போராட முடியும்'' என்று கூறிவிட்டு, அந்தப் போராட்டம் எந்த முறையிலிருக்கும் என்பதை மழுப்பவிட்டார்! நெசவுத் தொழிலில் ஈடுபட்டோர்களைக் காப்பாற்றுவது அரசாங்கத்தின் கடமை என்று சொல்லிவிட்டால் போதுமென்று

8-ம் பக்கம் பார்க்க

# திராவிட நாடு திராவிடருக்கே

["திராவிட [illegible]த்தன்"]

திராவிடஸ்தானாவது — திராவிடஸ்தானியாவது என்று [கி]ண்டல் பேசுகிறது ஒரு கோஷ்டி. கடந்தகால சம்பவங்கள் [மு]ழுவதையும் மறைத்துவிட்டோ அல்லது மறந்துவிட்டோ இக் கோஷ்டி பேசுகிறது. பாக்கிஸ்தானாவது—பாக்கிஸ்தானியாவது என்று கோமாளித்தனம் பேசி மூக்கறுபட்ட அதே முத்தண்ணுக்கள்தான் இப்போது கிளம்பியுள்ளனர் திராவிட நாட்டுப் பிரிவினையையும் நையாண்டி செய்ய!

திராவிடஸ்தான் முழக்கம் சிலருக்கு ஆச்சரியத்தையும் சிலருக்கு மாச்சரியத்தையும் கொடுக்கிறது. சிலருக்குப் புரியாத புதிராகவும் தோன்றுகிறது. ஆரியராவது திராவிடராவது என்று கேலி பேசும் அளவிற்கு அறிவு சூன்யம் அண்டிவிட்டது. அந்தோ பரிதாபம்!

சரித்திர ஆராய்ச்சியாளர்கள், அரசியல் அறிஞர்கள் யாவ[ரும்] ஒரு தலையாக ஆதரவளிக்கின்றனர் திராவிட இயக்கத்திற்கு. [தி]ராவிட இயக்கம் திராவிடஸ்தானை அமைக்கும் வெற்றிச் [சம்]பவம் அண்மையில் நடக்கப் போவது உறுதி. "திராவிடஸ்[தா]ன் காணும் பெருநாளே தென்னிந்தியர் யாவருக்கும் ஓர் [தி]ருநாளாகும்" என்று தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் [மொ]ழிகோலித் தந்துள்ள பொன் மொழிகள் மெய்ப்பிக்கப்படும் [நா]ள் வெகு விரைவில் வந்துக் கொண்டுள்ளது.

"ஏக இந்தியா பிடிப்பிலிருந்து மீண்டு நமக்கென தனித் திராவிட குடியரசுக் காண்போம்" என்னும் சூளுரையை பொருளாகக் கொண்டதாகும் திராவிடஸ்தான் வீர முழக்கம்.

திராவிடர் தனிப்பெரும் இனத்தவர். இவர்களுடையதென உரிமையானதொரு குறிப்பிட்ட நிலப் பகுதியுண்டு அப் பகுதியை தமது உரிமையாக்கிக் கொண்டு மக்களின் இச்சைக் கிணங்க சுதந்திர அரசு காண்பது என்பதுதான் திராவிட இயக்கத்தின் குறிக்கோள்.

இந்திய நாட்டு மக்கள் யாவரும் ஒரே இன மக்களே யென்[று]ம், மொழிகள் யாவும் ஒரே சமஸ்கிருத இன மொழிகளே என்[று]ம், பொய்யுரைப்பகன்று இப்பொய்யுரையின் அடிப்படையில் திராவிட இன மக்களையும், திராவிட நாட்டையும் அடிமைப்படுத்தி எதேச்சாதிகாரம் செய்ய நினைக்கின்றனர் ஒரு கூட்டத்தினர். இந்த எதேச்சாதிகார கூட்டத்தாரிடம் அகப்பட்டு அல்ல[லு]றும் திராவிடத்தை மீட்டு சுயேச்சையான திராவிடக் குடியரசு காணவேண்டும் என்பதுதான் திராவிடர்களின் ஆவல் இப்[ப]டிப்பட்ட ஆவலானது எல்லா வழிகளிலும் நேர்மையானது [எ]ன்பதைப் பல கண்ணெதிர் உண்மைகளைக் கொண்டும் நாட்டுச் [சம்]பவங்களை நினைவு படுத்தியும், சரித்திர வரலாறுகளை எடுத்[து]க் காட்டியும் மெய்ப்பிக்க முடியும்.

அயர்லாந்தை எடுத்துக் கொள்வோம். அந்நாட்டின் சுதந்தி[ர]ப் போர் வரலாறு நமக்குத் தெரிந்ததே. ஏன் அந்நாடு தன்னாட்[சி]ப்பெற விழைந்தெழுந்தது என்பதையும், இப்போதும ஏன் எழுச்சியுடன் தன் சுதந்திரப் போரை நடத்தி வருகிறது என்[ப]தையும் சிந்தித்துப் பார்த்து உணர்ந்தால் திராவிட நாட்டுப் [பி]ரிவினை எழுச்சியின் பொருள் தெற்றென விளங்கும். அயர்லாந்[தி]ன் ஒரு பகுதியான "அல்ஸ்டர்" ஆங்கிலேயரின் பிடியிலிருந்து [வி]டுபடுதல் வேண்டுமென இப்போதும அயர் மக்கள் வீறுகொண்[ெட]ழுந்து ஆர்ப்பரிப்பது எதற்காக என்பதையும் சிந்தித்துப் [பா]ர்க்க வேணடும்: அயரிஷ்காரர்களும் ஆங்கிலேயர்களும் நிறம்—[நா]டை—உடை பாவனை ஆகிய யாவற்றாலும் ஒன்றுபட்டவர்கள் [தா]ன். இவ்வொற்றுமைகள் மிக இருந்தும் ஏன் தனித்திருக்கவும் [தன்]னாட்சி காணவும் விழைகின்றனர்? உலகம் எங்கணும பரவி [வ]ழடைந்துள்ள ஆங்கிலம் வேண்டாமென்று புறக்கணிப்பதும், [த]ம் தாய்மொழியான அயிரிஷ் மொழியே நாட்டு மொழியாக [இ]ருக்கவேண்டுமென விரும்புவதும் எற்றுக்கு? இம்மக்கள் விழை[வு] யாவும் குறுகிய நோக்கததின்பாற்பட்டதெனக் கூற இய[லு]மா? அயர்லாந்து மகன் ஒருவன் "அல்ஸ்டர்" பகுதியும் அயர்[லா]ந்து ஆட்சியின் கீழ் வரவேண்டும் என விழைந்து அவ்விழை[வி]ன் காரணமாக 'அயர்லாந்து அயர்லாந்து மக்களுக்கே' என்று [அ]ல்லது 'ஜெய் அயர்லாந்து' என்று) வீரமுழக்கம் எழுப்பும் [போ]து அச்செய்கையை எள்ளிநகையாட முயலுவோமா? அவன் [எ]ழுப்பும் ஒலியில் பொதிந்துள்ள நாட்டுப்பற்றையும், மக்கட்பற்[றை]யும், மொழிப்பற்றையும, இனப்பற்றையும் இழிவுபடுத்த முற்[ப]டுவோமா? அயரின் சுதந்திரப் போரை வீரத்துடன் நடத்[தி]ய மைக்கல் காலின்ஸ், டிவேலரா போன்ற வீரர்களையோ, அய[ர]ின் விடுதலைக்கு நல்லாசி கூறி ஆதரவளித்த பெர்னார்ட்ஷா [போ]ன்ற அறிஞர்களையோ இகழ்ந்து பேச நா எழுமா?

தன் சுய உரிமையை இழந்து கையறு நிலையில் இருக்கும் [இ]ப்போதைய நிலையிலும் தனக்கெனத் தனிப் பாராளுமன்றம் [அ]மைத்துத் தனியாட்சி நடத்த விழையும் ஸ்காட்லாந்தையும் [பா]ர்த்துக் கொண்டுதானிருக்கிறோம். உலக மேதை எனப்புக[ழ]ப்படும் லார்ட்ப்பாய்ட் ஆர் முதலிய பெரியார்கள் ஸ்காட்லாந்து [சுத]ந்திர கிளர்ச்சிக்கு ஆதரவு தந்து நடத்த முனைந்துள்ளார்கள் [எ]ன்பதை நன்கு பார்த்து வரும் நாம் இதைப் பற்றி என்ன [நி]னைக்க முடியும். இவர்கள் நடத்தி வரும் ஸ்காட்லாந்து சுதந்[திர]க் கிளர்ச்சியை குறுகிய நோக்குடையது என்றோ, ஆதரவு[தரு]ம் இம்மேதைகளை குறுகிய நோகுள்ளவர்கள் என்றோ, சுலப[மா]கக் கூறிவிட முடியுமா? ஸ்காட்லாந்தின் அந்தஸ்த்தை [உய]ர்த்தி வளம்பெறச் செய்து, உலக அரங்கில் அதன் மேன்மை [பு]கழும் சிறந்து விளங்க விழையும் ஸ்காட்லாந்தியர்களை நாம் [சு]லபமாக குறுகிய நோக்காளர்கள் என்று கூறிவிட முடியா[த]ன்றோ!

இதே போன்றுதான் திராவிட மக்கள் எழுப்பும் திராவிடஸ்தான் எழுச்சியும், தங்களுக்கென்று இயற்கையாயமைந்த ஒரு நாடு உண்டு, ஒரு மொழியுண்டு, ஒரு நாகரிகமுண்டு என்று கூறி தம் இனத்தை சிதைவுறு வண்ணம் கட்டி ஆள திராவிடமக்கள் விழைகிறார்கள் என்றால் இதில் என்ன குறுகிய நோக்கத்தைக் காணமுடிகிறது என்பது தெரியவில்லை! ஒரு ஸ்காட்டிஷ் மகன் தன்னை எப்படி பிரித்தானியன் என்று கூறிக்கொள்ள ஒப்பமாட்டானோ அது போன்று தான் ஒரு திராவிடன் தன்னை ஒரு இந்தியன் என்றோ அல்லது பாரதவன் என்றோ கூறிக்கொள்ள ஒப்ப மாட்டான் என்பது நன்கு தெரிந்தும் புரிந்துக் கொள்ளக்கூடிய தொன்றாகும். இத்தாலியன் ஒருவன் தன்னை ஐரோப்பியன் என்றோ தன்னுடு ஐரோப்பா என்றோ கூறிக்கொள்வானோ? கூறிக்கொள்ள மாட்டானன்றோ! அதே போன்றுதான் திராவிடன் தன்னை இந்தியன் என்றோ தன்னுடு இந்தியா அல்லது பாரதம் என்றோ கூறிக்கொள்ள முடியாது.

எனவே இயற்கையானமைந்துள்ள இனபற்றும்; நாட்டுப் பற்றும், மொழி பற்றும் தெள்ளத்தெளிய புரிந்துவிட்டால் இவர்கள் மயக்கம் தெளிந்துவிடும்; அறியாமையினால் கேலியும் கிண்டலும் பேசுவதை நிறுத்திக் கொள்வார்கள் என்றே கருதுகிறோம்.

ஐரோப்பா கண்டத்தின்கண் உள்ள பல நாடுகளும் நாகரிகம்—கலை முதலியவற்றிலும் ஒத்த தன்மையில் இருந்த போதிலும் கூட இந்நாடுகள் யாவும் தனித்தனி நாடுகளாகத் தனி மொழிப் பேசியும், தனியரசு அமைத்தும், தன்னாட்சி நடத்தியும் வருவதேன்? குறுகிய நோக்கத்தினாலா தனித்து வாழ்கின்றன? இல்லையன்றோ! ஆகவே பல திறப்பட்ட வகைகளிலும் ஒற்றுமை கொண்ட மக்கட் கூட்டத்தை உடைய ஐரோப்பாவே தனி இன—மொழி உரிமை கொண்டாடி தனி நாடுகளாகப் பிரிந்து வாழும் படியுள்ளதென்றால், பலதறப்பட்ட மொழிகளையும், பலதறப்பட்ட நாகரிகத்தையும், பலதறப்பட்ட நடையுடை பாவனைகளையும் உடைய ஒரு பெரிய பூபாகமான "இந்தியா" ஒரே நாடாகக் கொள்ளப்படுவது இயற்கைக்கு ஒத்ததும், நடைமுதல் ஆட்சிக்கு முடிவதும் ஆகுமா என்பதை சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

இந்தியா ஒரு துணைக் கண்டம் என்பதுதான் உண்மையேயன்றி ஒரு நாடு எனக் கூறுவது பொறுத்தமுடையதன்று. இப்போது அயல் நாட்டாரும், அறிஞர்களும், சரித்திரக்காரர்களும் 'இந்தோ-பாகிஸ்தான் சப்காண்டினென்ட்' என்றேகூறிவருவதையும், திராவிட நாட்டைக் குறிக்கும்போது 'தென் இந்தியா' என்றே அழைப்பதையும் கவனித்தால் உண்மை நன்கு தெரியும். இவ்வுண்மையை ஒப்புக்கொள்ள விரும்பவில்லையானாலும், பர்மா துண்டிக்கப்பட்ட வரலாற்றையும், பாக்கிஸ்தான் சிருஷ்டிக்கப் பட்ட நிகழ்ச்சியையும், இலங்கை பிரிக்கப்பட்ட உண்மையையும் கூர்ந்து பார்த்தால் திராவிடஸ்தானாவது என்று கேலி செய்யும் தோழர்களின் அறிவு சற்று வேலை செய்ய ஆரம்பிக்கும் என்பது திண்ணம்.

சிந்துநதிப் பிரதேசத்திற்கு மட்டுமே கிரேக்கர்களால் இடப்பட்டு அழைக்கப்பட்டு வந்த "இந்தியா" என்ற சொல் பிற்காலத்தில் தவறாக இந்திய துணைக்கண்டம் பூராவிற்குமே இடப்பட்டு வழங்கப்பட்டுவிட்டது. இவ்வழக்கத்தையே ஆங்கிலேயர்களும் தங்கள் சாம்ராஜ்ய ஆசைக்குக் கையாள முற்பட்டனர். அன்றையிலிருந்து இவ்வார்த்தை செல்வாக்கடைந்து விட்டது. ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பத்தில் இந்தியா என்ற பெயரில் இமயமுதல் குமரிவரை ஒரே நாடு இருந்ததில்லை.

பலதறப்பட்ட நாடுகளையும் வென்று, அவைகள் யாவற்றையும் ஒரே நாடாகக் கருதி ஒரே ஆட்சியின் கீழ் வைத்து அரசாட்சி செய்யத் தலைப்பட்டனர் ஆங்கிலேயர். இப்படி ஒரு துணைக்கண்ட நிலப்பரப்பை ஒரு யூனிட் என்னும் வகையில் அமைத்துக் கொண்டதற்குக் காரணம் தம் எதேச்சதிகார ஆட்சிக்கு ஊறு நேராமல் இருப்பதற்காகத்தான். இரண்டாயிரம் மைல்களுக்கப்பால் நிறுவப்பட்ட ஒரு குடியேற்ற நாட்டை ஆளுவது ஒரு எதேச்சதிகார ஆட்சியின் அமைப்பால்தான் முடியும் என்னும் அரசியல் உண்மை காரணமாகவும் இந்தியாவென ஒரே நாடாகப் பிரகடனப் படுத்தி அதற்கேற்ப ஆட்சி புரியத் தலைப்பட்டனர். இப்படியாக சில ஆண்டுகள் ஒரே நாட்டு மக்களாகவும் ஒரே இன மக்களாகவும் கருதப்பட்டு ஒரே வித ஆட்சியின் கீழ் இருந்து வந்த ஒரு காரணத்தினாலேயே பல மொழிகளும், பல இனங்களும், பல நாடுகளும் ஒரே மொழி—ஒரே இனம்—ஒரே நாடு என்று ஆகிவிட்டதாகக் கூற முடியுமா?

உதாரணமாக இந்தோனேஷ்யாவை எடுத்துக் கொள்வோம். தனித் தனியாகவுள்ள பலத் தீவுகளையும் ஒன்று சேர்த்து இந்தோனேஷ்யா என்ற பெயரைச் சூட்டிவிட்டனர் டச்சுக்காரர்கள். பல மொழி பேசும் மக்களையும், பல இனமுள்ள மக்களையும் சேர்த்து இந்தோனேஷ்யர் என்று அழைத்தனர். இச்செய்கை தங்கள் ஆட்சி சௌகர்யத்திற்காக ஏற்படுத்திக் கொண்டதேயன்றி இவர்கள் செய்கையால் பலதறப்பட்ட மக்கள் எல்லோரும் ஒரே இனமாக மாறிவிட்டனர் என்றோ பல நாடுகளும் ஒரே நாடாக மாறிவிட்டதென்றோ கூற இயலாது. இவ்வுண்மையை இப்போதும் மக்காஸர், மொலுக்கஸ் போன்ற பிரதேசங்களில் நடந்து வரும் எழுச்சிகள் நன்குணர்த்தும். இந்தோனேஷ்யாவை எப்படி டச்சுக்காரர்கள் சிருஷ்டித்தார்களோ அதேபோன்றுதான் [இந்தியா]வையும் ஆங்கிலேயர்கள் சிருஷ்டித்தார்கள். இப்படிப்[பட்ட] சிருஷ்டிகள் யாவும் இவ் வெள்ளையர்களின் துப்பாக்கி[முனை]களிலும்—பீரங்கி முனைகளிலும் சிருஷ்டிக்கப்பட்டவை [என்ப]தையும், ராணுவ பலம்—போலீஸ் பலம் ஆகியவைகள் [உ]தவியால் காப்பாற்றப்பட்டு வளர்ந்து வந்தவை என்பதையு[ம் ந]ாம் நன்கறிந்துள்ளோம்.

ஒரு நாட்டை வெற்றி காண்பவன் அந்நாட்டை தன் விருப்பப்படி ஆட்சி புரியவும் அதைத் தன் பிடியில் வைத்து தனதாக்கி கொள்ளவும் தக்கதொரு அரசியல் தந்திர உபாயத்தைக் கடைப்பிடிப்பது வழக்கம். இப்படிப்பட்ட வழக்கத்தையும் உபாயத்தையும் தான் ஆங்கிலேயர்கள் கடைப்பிடித்தனர். இவ்வாங்கிலேயர்களைப் போன்றுதான் முகம்மதியர்களும், மொகலாயர்களும், மௌரியர்களும் இவ்விந்தியத் துணைக்கண்டத்தை வெற்றி கண்ட போது இஸ்லாம் ராஜ்யமென்றும், மொகலாய ராஜ்யமென்றும், மௌரிய ராஜ்யமென்றும் அரசாண்டு வந்தனர். அவர்கள் காலத்தில் இந்தியா இருந்ததில்லை; இந்தியசாம்ராஜ்யமும் இருந்ததில்லை.

இமயவரம்பன்—செங்குட்டுவன் போன்ற சேர மன்னர்களோ, கரிகால் வளவன்—ராஜராஜன் போன்ற சோழவரசர்களோ, ஆரியப்படைக் கடந்த நெடுஞ்செழியன் போன்ற பாண்டி வேந்தர்களோ இவ்விந்திய நிலப்பகுதியை வென்று அரசாண்ட போது 'தமிழ் சாம்ராஜ்யம்' என்றுதான் இந்நிலப் பரப்பு அழைக்கப்பட்டதே தவிர, இந்திய சாம்ராஜ்யம் என்றோ அல்லது பாரத வர்ஷமென்றோ வழங்கப்படவில்லை. ஆரிய வர்த்தமும்—வங்கமும்—கடாரமும்—திராவிடமும் ஒரே தமிழ் அரசாட்சியின் கீழ் இருந்துவந்துள்ள காரணத்தாலேயே ஆரிய இனமும், வங்கஇனமும், பர்மிய இனமும், திராவிட இனமும் இல்லாதொழிந்து விட்டது என்று நினைக்க இயலுமா? இதுபோன்று ஆரிய நாட்டரசன் திராவிடத்தையும் வென்று (இக்காரியம் நடைபெறவில்லை) ஒரே நாடாக இந்திய நிலப்பரப்பை பரதகண்டம் என ஆண்டுள்ளான் என்றால் திரா[விட] இனம், திராவிட நாடு அழிந்துவிட்டது என்று கூறிவிட முடி[யுமா]?

ஆகவே, ஒரே ஆட்சியின் [கீ]ழ் நீண்ட காலம் ஒரு பெரிய நிலப்பகுதி அடிமைப் படுத்தப்[பட்டு] ஆட்சி புரியப்பட்டு வந்துள்ள காரணத்தால் அந்நிலப் பரப்பி[ன் ப]ல இயற்கை அமைப்புகளும், பல மக்கட் இனப்பிரிவுகளும் [ப]ல திறப்பட்ட நாகரீகங்களும் ஒன்றாக்கப்பட்டு அழிந்தொழிந்[தன] என்று கூறுவது இயலாது. சுமார் 150 ஆண்டு ஆங்கில ஆ[ட்சி]யின் காரணமாக நாம் ஆங்கிலேயர்களாகவா ஆகிவிட்டோம்? கிரேட் பிரிட்டனுடன் ஐக்கியப் படுத்தப்பட்டுள்ள ஸ்காட்லாந்து தன் பெயரான ஸ்காட்லாந்து என்பதையோ அல்லது தன் மொழியான ஸ்காட்டிஷ் மொழியையோ இழந்து விடவில்லையன்றோ? சுமார் நானூறு ஆண்டுகள் ரோமானியர்களுக்கு அடிமைப் பட்டிருந்த ஆங்கிலேயர்கள் ரோமனியர்களாகவா ஆகிவிட்டனர்? இல்லையல்லவா?


விரைவில் வெளிவருகிற[து].

பாண்டியன் பதிப்பகம் [அளி]க்கும் கருத்து விருந்துகள்

முற்போக்கு எழுத்தா[ள]ர், கல்லூரி மாணவர் இளை[ஞ]ர்

மு. அருச்[சு]னன் தீட்டிய

'அ[ரு]ன்'

'புரட்சி[க்] கவிதை'

மூவண்ண முகப்பு. விலை 4 அணா.

'திராவிடன்' இதழில் கருத்து விருந்துகளை அளித்துவரும் இளம் முற்போக்கு எழுத்தாளர்

இளஞ்சேரலாதன் தீட்டியது

'பாரி மகளிர்'

மூவண்ண முகப்பு விலை அணா 4

விற்பனை[யில்] உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| நமது கடவுள்கள் | (எ[ம்.] [ஜி]. என்.) | அணா. | 4 |
| கந்தலீலா | (இர[ா]மணுளன்) | ,, | 8 |

வியாபாரிகளுக்கு தக்[க க]ழிவு உண்டு. முன்பணம் இன்றி அனுப்பப்பட[மா]ட்டாது. தபால் செலவு இலவசம்.

பாண்டிய[ன்] பதிப்பகம்

16, சீலயன்ஸ் [illegible] மில் தெரு, சென்னை-1


ஒரு சாம்ராஜ்யம் ஏற்படலாம்; ஒரு இனம் ஆதிக்கம் செலுத்தலாம்; ஒருமொழி அரியாசன மேறலாம்; ஒரு பழக்கவழக்கம் நடையுடை பாவனை செல்வாக்கும் பெற்றிருக்கலாம். இப்புகழாலும் அதிகாரத்தாலும் மற்ற இனங்களையோ, மொழிகளையோ நாகரீகங்களையோ களைந்துவிட முடியாது என்பதை நாம் உலக சரித்திர மூலம் தெரிந்துள்ளோம். ராஜ்யபாரம் மாறுதலடைவது என்பது உலக நிகழ்ச்சிகளில் சர்வ சாதாரணமானது. நிரந்தரமானதல்ல, அடிக்கடி மாற்றமும் ஏற்றத்தாழ்வும் அடையலாம். இந்த அற்ப ஆயுள் ராஜ்ய மாற்றத்தால் இயற்கையானமைந்த பூகோள அமைப்பையும், தொன்று தொட்டு நிலவிவரும் மொழியையும், நாகரீகத்தையும் களைந்தெறிந்து புதியதொன்றை விளைவிக்க முடியாது என்பதையும் நாம் நன்கு அறிந்துள்ளோம்; கண்முன்னும் பார்த்து வருகின்றோம்.

ஆகவே, தங்களுக்கென ஒரு மொழியும், ஒரு நாகரீகமும், ஒரு கலையும் உடையவர்கள் தாங்கள் பரந்து வசித்துவரும் எல்லை வரையில் தங்கள் நாடு என்று கூறிக்கொள்வதும், தங்கள் கலை நாகரீகம் என்று கூறிக்கொள்வதும், தங்கள் மொழி என்று கூறிக்கொள்வதும் இயற்கையானமைந்த தேசியப்பற்றேயன்றி வீண் கூற்றன்று.

ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு முன் இந்தியா என்ற இப்பெரிய நிலப்பரப்பு பலசிறு நாடுகளாகத்தான் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. ஆங்கிலேயர் ஆதிக்கத்திலுங்கூட ஒரே இந்தியா உருவாகவில்லை யென்பதையும் பல நூற்றுக்கணக்கான சமஸ்தானங்கள் தன்னாட்சியுடன் நிலவி வந்தனவென்பதையும் நாம் நன்கறிவோம். பல ஆயிரம் ஆண்டுகட்கு முன் திராவிடர் என்னும் ஒரே இனத்தாரால் ஆளப்பட்டும், ஆரியர்கள் எப்படியோ இந்தியப் பகுதிக்குள் நுழைந்த பிறகு திராவிடர்—ஆரியர் என்ற ஒரு இனத்தாரால் ஆளப்பட்டும், பர்ஷிய சாம்ராஜ்பம் பஞ்சாப் வரையில் விரிவடைந்தபோது திராவிடர்—ஆரியர்—பர்ஷியர் என்னும் இனத்தாரால் ஆளப்பட்டும், மகா அலக்ஸாந்தர் பர்ஷிய சாம்ராஜ்யத்தை நிலைகுலைய செய்து சிந்துவை கைப்பற்றிய காலத்தில் திராவிடர், ஆரியர், பர்ஷியர், கிரேக்கர் என்னும் நான்கு இனத்தாரால் ஆளப்பட்டும், பிற்காலத்தில் மௌரிய, குஷான, முகம்மதிய, முகலாய கலப்பட இனங்களாலும் ஆளப்பட்டும் வந்துள்ளது என்பது இந்திய சரித்திரம் கூறும் உண்மையாகும். இவ்வாலாற்றுரையில் வடஇந்திய நிலப் பகுதியே பல இனங்களால் அவ்வப்போது ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது என்பதையும், விந்தியத்திற்கு தென்பால் உள்ள திராவிடம் திராவிடர்களால் மட்டுமே சரித்திரக் காலத்திற்கு முன்பிருந்தே ஆங்கிலேயர் காலம்வரை ஆளப்பட்டு வந்துள்ளது என்னும் உண்மையையும் நன்கு தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இப்படிப் பல இனங்கள் கிடையாது; ஆகவே பல இன உரிமைகளும் கிடையாது என்று கூறி இப்போது இந்து என்ற ஒரே இனந்தான் உள்ளது. ஆகவே இந்துஸ்தான் உரிமைதான் நியாயமானது என்று கூறினால் அது எதேச்சாதிகார, ஒரே இன ஏகாதிபத்தியவாதம் என்று கூறி அந்த வாதத்தைக் கெள்ளியெறிய வேண்டியது அவசியமாகும்.

இந்தியாவின் இனம் ஒன்றுதான் என்று கூறினால், இந்தியாவின் நாகரிகம் ஒரே நாகரிகந்தான் என்றால், இந்தியாவின் கலை ஒரே கலைதான் என்றால் அந்த ஒரே இனம், ஒரே நாகரிகம், ஒரே கலையைப் பற்றி பேசாமல் பல இனம், பல நாகரிகம், பல கலைகளைப் பற்றி ஆரியர்களின் வேதங்கள் முதற்கொண்ட பல நூல்களும், தேச சரித்திரங்களும் பேசுவதேன்? சரித்திர ஆராய்ச்சியாளர்கள் ஒரு முகமாகக் கூறுகிறார்கள் இந்தியா பல இன, கலை, நாகரிகம் கொண்ட கதம்ப தேசம் என்று. ஆரிய திராவிட இனங்களின் மோதுதலைச் சித்தரிப்பதே இராமாயணம் என்று ஓரிடத்தில் பண்டித நேரு கூறுகின்றார். இவ்வுண்மைகளைப் புறக்கணித்து பேசவும், எழுதவும் துணிவது அறியாமையன்றோ! உண்மையை 'கிரகணம்' செய்யும் வேலையை விட்டொழித்து உண்மையை உணர்ந்து சொள்ள வேண்டும் 'ஜெய் ஹிந்த்' தோழர்கள்.

திராவிடஸ்தான் கிளர்ச்சி தேசிய கிளர்ச்சியாகும். இதை சுலபமாதப் புரிந்து கொள்ளலாம் புரியவில்லை என்று கூறும் தோழர்கள் சற்று இலங்கை ஆட்சியை நோக்குவார்களாக. பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்ட கெடுதல்கள் யாவற்றையும் களைந்தெறிந்து, சிங்களம் சிங்களவர்களுக்கே என்னும் உரிமையுடையதாகச் செய்து, தமிழர் ஆகட்டும் வங்காளி ஆகட்டும் அன்னியர்தான் என்று சட்டம் செய்து, சிங்களத்தின் சுதந்திரத்தையும் இன உரிமையையும் நிலை நாட்ட முனைந்துவிட்டனர்; சில ஆண்டுகட்கு முன் நாம் உரிமை கொண்டாடினோம் இலங்கை நம்முடையது என்றும், நம் இனத்தைச் சார்ந்ததென்றும், நாம் நாகரிகத்தை மேற்கொண்டதென்றும், ஆனால் இப்போது நடப்பதென்ன? நாம் அன்னியர் சிங்களத்தின் வளத்தைப் பெருக்கி, சீரையும் சிறப்பையும் சம்பாதித்துத் தந்து, உண்ண உணவும் உடுக்க உடையும் கொடுத்து வள்ளலாகத் திகழ்ந்த தமிழன் இப்போது எந்த உறவில் உள்ளான்? பர்மிட் வாங்கிக் கொண்டு போகவும் வரவும் உள்ள சந்தேக ஜாப்தாப் பேர் வழியாக உள்ளான்! இருபது [illegible]

[illegible] ளவர்கள் தானே, நம் நாட்டின் வளத்தைப் பெருக்கித் தந்த[வ]ர்கள் ஆயிற்றே, நம் நாட்டின் புகழிற்கும் நலத்திற்கும் பட்ட பாங்காளர் ஆயிற்றே என்ற பச்சாதாபமோ, ப[ரி]ந்[து] நட்போ, உறவோ மற்ற எதனையுமே கருதாமல் அன்னிய[ர்]களாகவே நடத்தி வருவதைக் கண் முன்னுகப் பார்க்கும்போது திரா[விடஸ்தான்] [கி]ளர்ச்சியின் பொருள் தானாகவே விளங்குமே! [ஆ]பிரிக்காவில் உதைபடும் திராவிடனையும், மலேயாவில் கொ[ல்லப்] செய்யப்படும் திராவிடனையும், பர்மாவில் சூறையாடப்படும் திரா[]விடனையும் பார்த்துக் கொண்டே திராவிடஸ்தானாவது, திராவி[ட]ராவது என்று கிண்டல் பேசும் அரசியல் பிரகஸ்பதிகளைப் பற்[றி] என்னென்பது!

ஏக இந்தியா என்று பேசப்படுவதெல்லாம் ஆசையின் அ[வ]கத்தைத் தான் காட்டுகின்றதே தவிர உண்மையை ஊன்றி [கவ]னித்ததாகத் தெரியவில்லை.

இப்போதைய திராவிடஸ்தான் கிளர்ச்சியானது [...] கோள கன்னட தமிழர்களிடையே ஒரு உறவையும், நட்[பையும்] ஐக்கியத்தையும் ஏற்படுத்தி விடுவதில் வெற்றிபெறுமே[...] இவர்கள் கனவு காணும் பாரதவர்ஷம் ஏற்பட முடியாது [என்]பதையும் நன்கு தெரிந்து கொண்டுள்ளார்கள். திரா[...] விரும்பும் திராவிடம் உருவாகுமேயானால் பாரத கண்டம் [...] பும் பாரத புத்திரர்கள் கங்கை நதிக் கரையில்தான் தங்கள் [...] தேசத்தைக் காண முடியுமே தவிர அவர்கள் நினைக்கும் இ[மயம்] முதல் குமரி வரையில் ஆதிக்கம் செலுத்த முடியாது. [இ]வ்வுண்மையை வடவர் நன்கு தெரிந்துள்ளார்கள். அதனால்தா[ன்] கிடைத்த வரையில் தங்கள் ஜன்மபூமியை சொர்ண பூமியாக் [கிக்] கொள்வதில் முனைந்துள்ளனர். பற்றாக்குறைக்கு உலக பா[ங்கி]யிடம் கடன் வாங்கி தம் காரியத்தை கண்ணுகக் கவனிக்கின்[றனர்]கள்.

திராவிடர்களாகிய தென்னிந்தியர்கள் ஒற்றுமை[...] தன்னிச்சையாகக் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்க[...] என்பதுதான் வடநாட்டு ஆட்சியின் அந்தரங்க எண்ண[ம்] ஒற்றுமை என்ற சக்தியின்றி ஒன்றுக்கொன்று எதிரிட்[டு] கசவு ஏற்படுத்திக் கொள்ளட்டும் என்பதுதான் ஜெய்[ஹிந்த்] தலைவர்களின் ஆவல். எப்போது ஒற்றுமை என்பதை அடை[ந்து] விட்டார்களோ அப்போதே நம் மிச்ச பாரதமாதா சொச்ச ப[ாரத] மாதா ஆகிவிடுவாள் என்பது அந்த சாணக்கியர்களுக்குத் தெ[ரிந்த] உண்மையாகும். ஆகவேதான் விசால ஆந்திரம் என்ற [முழக்]கத்தை ஆந்திரர்களிடையேயும், ஐக்கிய கேரள கோஷ[த்தை] மலையாளிகளிடையேயும், கோசகன்னடம் என்னும் கலை[...] வாத கூப்பாட்டை இந்திய சர்க்காரின் எதேச்சதிகா[ர] பிடிப்பில் என்றும் கோஷ்டத்தை கன்னடர்களிடை[யே] நீடித்து வரும்படி தூபம் போட்டு வருகின்றனர். [...] மலையாளி, கன்னடர் போடும் கூ[ச்ச]ல் போலவே தமி[ழர்] "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற கூச்சலைப் போட்டுக் கொ[ண்]டிருந்தால் அவர்களுக்கு அவ்வளவு தொல்லையிராது அல்ல[வா?] அதனால்தான் கண்ணகி பரம்பரை கதறிக் கொண்டிருக்கி[றது]. அவர்கள் விரும்புவதும் அதுதானே! ஆனால் நாம் முழ[க்கும்] முழக்கம் அவர்கள் அஸ்திவாரத்தின் வேரையே பறி[ப்ப]வன்றோ இருக்கிறது.

திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கத்தை [தமிழ]னும், கன்னடியனும், மலையாளியும் முழங்க ஆரம்பித்து விட்[டால்] மிச்ச இந்தியா (சிந்து நதிக்கரை பாக்கிஸ்தானுக்குப் போய் [விட்ட]படியால்) கங்கைநதி தீரத்தில் தங்கிவிடும். கங்கைநதி தீ[ரத்தில்] தங்கிவிடும் இந்த பாரதமாதாவிற்கு ஜே போடுவதற்கோ [அல்]லது வந்தேமாதரம் கோஷம் போடுவதற்கோ, இப்பாரத பு[த்திரர்]களுக்கு வெட்கமாக இராதா! அதனால்தான் விரிந்த மன[ப்பான்]மையை திறந்து வைத்திருக்கின்றார்களாம்!

திராவிட நாடு அமையப் போவது திண்ணம். இதை [...] புத்திரர்கள் நன்கு தெரிந்து கொண்டுள்ளார்கள். இ[...] அவர்களுடைய செய்கையினின்றும் நன்கு விளங்கும் [...] வாகின் உற்பத்திச் சாலைகள் யாவும் அங்கே அ[மைக்கப்படுகின்]றன. ஏன் என்று கேட்டால் இரும்பும் கரியும் அப[...] படும் வசதி அங்குதான் இருக்கிறதாம்! இங்[கு] வெறும் மண்ணுகவா இருக்கிறது! சேலம், ஆற்காடு [பகுதி]களில் இரும்பு இல்லையா கரியில்லையா! இரண்டும் மிகமி[க அ]மிதமாக இருக்கிறதாக சில தினங்களுக்கு முன் சென்னை [டெவ]லப்மெண்ட் டிபார்ட்மெண்ட் செக்ரடரி திரு. லோபோ [...] ரேடியோவில் விவரித்தாரே! ஆர்க்காட்டுப் பகுதியின் கரிமுத[...] மானக் கரி என்றும் கரி சுரங்கம் ஏற்படுத்திவிட்டால் தெ[ன்னிந்]தியா பொன்னிந்தியா ஆகிவிடும் என்றெல்லாம் கூறி[...] இவைகளையெல்லாம் பொய்யென்று நினைக்கின்றனர் பாரத[புத்திர]வர்கள்! இல்லை! இல்லை! சௌகர்யதர்களாக இருக்கின்றன[ர்.] [கரி]யில்லை இரும்பில்லை தென்னிந்தியாவில் என்று கூறும் பிர[...] கள் வடஇந்தியர் இரும்பைப்பற்றி தெரிந்து கொள்வத[ற்கு] ஆயிரம் வருடங்களுக்கு முன்பே தென்னிந்தியாகிய தி[ராவிடர்] இரும்பைப்பற்றித் தெரிந்திருந்தார்கள் என்றும், தென்னி[ந்தியாவில்] பல இடங்களில் இரும்பு உருக்கும் தொழிற்சாலைகள் நட[த்தி]னர் என்றும் "தொல்புகழ் சரித்திர" ஆராய்ச்சியா[ளர்] (திரு. பி. டி. சீனிவாச அய்யங்கார் தம் "இந்தியாவில் கற்கா[லம்]" என்னும் நூலில் கூறியுள்ளது கவனிக்கத்தக்கதாகும்); கூ[றியும்] ஏன் தெரிந்திருக்கவில்லை? இங்கு புகப்படும் கரி, இரும்பு[...] களை அகழ்ந்து சுரங்கங்களை நிர்மாணித்து தொழிற்சாலை[களை ஏற்]படுத்துவதற்கு ஏன் கசக்கிறது. தக்ஷிண பாரத புத்திரர்[களுக்கும்] உத்தர பாரத புத்திரர்களுக்கும் திராவிடம் உற்பத்தி [...] மின்சாரத்துடன் கரி, இரும்பு சக்தியும் சேர்ந்தால் ஏ[ன் தென்]னிந்தியா பொன்னிந்தியாவாக முடியாது? [...]

...க்கின்றன திராவிடத்தில்! இவைகளையெல் ...ம் கிளிப்பிள்ளைகளுக்குச் சொல்லுகிறமாதிரி யில் எடுத்துச் சொன்னால் அதைக் கேட்பதில்லை மதிப்பதில்லை நம் திராவிட காங்கிரஸ் பக்தர் ...ள். ஜெய் ஹிந்த் கோஷமிட்டு எல்லாவற்றை யும் மறைத்து விடுவது! இதுதான் சுயராஜ்யம் வந்ததும் பாரதமாதாவிடம் கற்றுக் கொண்ட முதற் பாடமாகும்!

விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடம் பல லட்சக் கணக்கில் செலவு செய்து கட்டப்படுவது அங்கு! துறைமுக சிருஷ்டி, கடல் வாணிபப் பெருக்கம் ஆகியவைகளும் அங்கே தான். ...த் துறைமுகத்தையும், தூத்துக்குடி ...முகத்தையும் செப்பனிட்டு கடலோர ...ணிபத்தை வளம்பெறச் செய்ய மனது வர ...லை. ஆனால் எங்கோ ஒரு பேர் தெரியாத ...ண்டல்லா என்றயிடத்தில் துறைமுகம் அமைக் ...ஞர்கள் அதுவும் மார்வாரி, குஜராத்திகளின் ...ரட்டம் நீடிப்பதற்கான இடத்தில். இயற்கை ...றை முகங்கள் அமைந்துள்ள மாமல்லபுரம், ...டியக்கரை போன்ற இடங்கள் இவர்கள் ...களில் படவில்லை. பல இடங்களில் துறை முகங்களை அமைத்துப் பழைய புகழ் வாய்ந்த திராவிட கடல் வாணிபத்தை செழிக்கச் செய்ய வேண்டிய எண்ணம் சிறிதுகூட இல்லை. செயற்கைத் துறைமுகங்கள் கூட ...மைக்க வேண்டிய அவசியத்தில் இருக்க ...ல்லையா திராவிட கடல் வியாபாரப் பெருக் ...! சரித்திர காலத்திற்கு முன்னிருந்தே ...ல் வாணிபப் பெருக்கமுள்ள நாடாயிற்றே! ... தொழிலிலும் கப்பற் போரிலும் ...ம பொருந்திய நாட்டு மக்களைக் கொண் ...ருப்பதாயிற்றே! இவ்வுண்மைகளை யெல்லாம் ...றந்து விட்டார்களா அல்லது மறைத்து விட் ...ர்களா என்பது தெரியவில்லை.

...நெசவு மில்கள் யாவும் அவர்களைச் சுற் ...யேதான்! இங்கே உற்பத்தி செய்யப்படும் ...ல் விநியோகத்திற்கு அங்கே இருந்து உத்த ... வரவேண்டும்! வேடிக்கையாக இல்லையா! ...திய துணி கிடைக்கவில்லை யென்றால் ...யையும் ராட்டிநூ... ...யும் காட்டுகிறார் ...ள் நமக்கு. "வேதா...ம்", "வரதாச்சாரி" ...வஷம் போட்டுக் கொள்ளச் சொல்கின்றார் ...ளோ என்றுதான் நினைக்க வேண்டி யிருக் ...றது!

திராவிடத்தின் செல்வம் டில்லிக்குப் ...பாய் அங்கிருந்து பிச்சைக்காரனுக்குக் கொடுக் ...ற பிச்சைக் காசு மாதிரி திரும்பி வருகிறது. ...ராமணார்த்தத்திற்கு தக்ஷிணைக் கொடுப்பது ...ால் கிடைத்தாலும் தேவலையே! ஏதோ ஒரு ...ம்ப சந்தோஷப்படவாவது முடியுமே!

இவைகளை யெல்லாம் நாம் தெரிந்துள்ளதை ... நம்ராஜ்ய மந்திரிகள் அதிகம் தெரிந்துதான் ...ருக்கிறார்கள், தெரிந்திருந்து என்னசெய்வது?

கொட்டிக் கொடுப்பதோ நம் ராஜ்யம்; ...டுக்கமாட்டேன் என்று அதட்டி அதிகாரம் ...ஏதோ பாரத ராஜ்யம். இந்த அதிகார ...க்கண்டு ஒரு சமயம் இல்லாவிட்டாலும் ... சமயமாவது ரோஷம் வரத்தான் வரு ...து என்ன செய்வது! நம் மனப் ...ன் விரிந்த மனப்பான்மையாயிற்றே! ... மனத்தில் நன்றாய் அழுந்திப் பதி ...யாகக் குனிந்து கொடுத்து முகத்தைப் ...த்திக் கொள்ள வேண்டியதுதான்!

திராவிட காங்கிரஸ் தோழர்கள் கொடுத்து ...ரும் ஆதரவு ஒரு ஏதேச்சாதிகார ஏகாதிபத்தி ...கதை சிருஷ்டித்து வருகிறது என்பதை அவர் ... உணரவில்லை. தங்கள் அறியாமையால் தம் ...ட்டினர் வடவர் ஏகாதிபத்தியத்தின் கீழ் அடி ...மகளாக உழல நேரிடும் என்பதை உணர ...லை. இவர்கள் கோஷ்டமிடும் 'ஜெய்ஹிந்த்' ...ர்களையே அழித்து ஒழிக்க உபாயகப்படும் ...நாகம் என்பதை அறிய மறுக்கின்றார்கள். ...வர்கள் எந்த பாரதத்திற்காக 'ஜெய்ஹிந்த்' ...கோஷம் போடுகின்றார்களோ அதே பாரதத் ...ன் புத்திரர்களாகவோ, ஆரிய புத்திரர்களா ...வோ நினைப்பதுமில்லை நடத்துவதுமில்லை. ...பாரதத்தின் புத்திரர்கள் என்று கூறிக்கொள் ...ம் இதென்னிந்திய காங்கிரஸ் புத்திரர்களை ...ரதப் புதல்வர்களாக பாவிக்க மறுத்து திரா ...டர் எனறே பேசுவதை இவர்கள் உணரக் ...டியவர்களாக இல்லை. வடநாட்டுக் கவிகள் ...முகமே எழுதவும் விட்டார்கள்; பாடியும் ...ர்கள் இலக்கியங்களைப்பற்றி. பக்கிம் சந்திரர்

"எங்கள் நாட்டின் விடுதலையே
எங்களின் உயிர் நாடி"



அடிமைத்தனத்தில் மூழ்கி வெளிப் பகட்டான வாழ்வை நடத்துவதைவிட சுதந்தரமாக நடுத்தர வாழ்க்கையிலிருந் தாலுங்கூட அதுவே ஒவ்வொரு நாட்டுக் கும்—அந்நாட்டு மக்களுக்கும் தன்மான முள்ள வாழ்வாகும். இந்நிலையில் இந்தி யத் துணைகண்டத்திலே திராவிடம் இயற்கை வளப்பத்திலோ மற்றும் அறி வாற்றலிலோ வடநாட்டுக்குக் கீழ்ப்பட்ட தல்ல. எனவே உரிமையுடன் திராவிடர் கேட்கும் நாட்டுப் பிரிவினையை எதிர்ப்ப வர் யாராலும் சொந்த புத்தியில்லாத மந்த புத்திக் கொண்டவர்களும், நாட்டுத் துரோகிகளுமேயாவார்கள்.

—கலைஞர் கருணாநிதி

## கொழும்பு கிராண்ட்பாஸ் திராவிட முன்னேற்றக் கழகம்

★

உறுப்பினர் கூட்டம் கடந்த 7—9—52 மாலை 5-மணிக்கு கழகப் பணிமனையில் நடை பெற்றது. தோழர். செவல்மணி கூட்டத்திற்கு வந்துள்ள கடிதங்களை வாசித்து தோழர். டி. எம். பீர்முகம்மது அவர்களை தலைமை தாங்கும் படிக் கேட்டுக் கொண்டதற் கேற்ப, உறுப்பி னர்கள் யாவரும் கழக வளர்ச்சிக்கு இயன்றளவு உழைக்கும்படி உணர்ச்சியுடன் சொற்பொழி வாற்றினர்.

பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமன தாக நிறைவேற்றப்பட்டன:

1. சீனி விலையை 15 சதம் அதிகரித்திருப் பதை இக்கூட்டம் கண்டிப்பதோடு உடன் அந்த விலை உயர்வைக் குறைக்கும்படி இலங்கை அரசாங்கததை கேட்டுக் கொள்கிறது. (2.) அரிசி விலையை கூட்ட அரசாங்கம் எண்ணுவ தாக அறிந்து வருந்துவதோடு அரிசி விலையைக் கூட்டக்கூடாது என அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது. (3) தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை குறைக்க வேண்டுமென முதலாளி யார் வன்மையாகக் கண்டிக்கிறது. (4) காலா வதியாகிவிட்ட "சவுக்கடி" வாழ்க்கை மீண்டும் சென்னை அரசாங்கம் உயிர்ப்பித்திருப்பது கண்டு வருந்துவதோடு இந்தச் செயலை வன்மை யாகக் கண்டிக்கிறது. கடைசியாக செயலாளர் கடந்த 4 மாத வரவு செலவுக் கணக்கை வாசித் துக் காட்டியபின் நன்றியுரையுடன் கூட்டம் இரவு 7 மணிக்கு இனிது கலைந்தது.

---

திராவிடர் என்கிறார். ரவீந்திரர் திராவிடர் எனப் புகழ்கின்றார். லோகமான்ய திலகர் தொல்புகழ் திராவிடர் எனக்கூறுகின்றார். காந்தி மகாத்மா திராவிட மொழிகள் பேசும் திராவிடர் என்று பேசியும் எழுதியும் சென்றார். பண்டித நேருவும் திராவிட இனத்தவர் என் றேக் கூறுகின்றார். இதையேத்தான் தினம் தினம் பாரதமாதா ரேடியோவும் கூறுகின்றாள். இவைகளையெல்லாம் கேட்டும் பார்த்துங்கூட புரிந்துக் கொள்ளக் கூடிய சக்தி யில்லாமல் மட்டரகச் சிந்துபாடிக்கொண்டு வீணாக நம்மீது வந்து மோதிக் கொள்கின்றன! "இத்திருக் கூட்ட"ந்தான் இந்நிலை யென்றால் முற்போக்கு எண்ணத்தில் ஊறிவரும் நமது தென்னாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்குக்கூட திரா விடநாட்டுப் பிரிவினைக்கான நியாய வாதங்கள், பிரத்தியட்ச நிகழ்ச்சிகள் புரியவில்லையே! பரி தாபம்.

(தொடரும்)

## நெசவாளர் துயர் தீர நாட்டுரிமைக்குப் போராடுக!

5-ம் பக்கத் தொடர்ச்சி

எண்ணாமல், அந்த வார்த்தை எந்த வகையில் நிறை வேற்றப்படும் என்பதையும் விளக்க வேண்டாமா?

'முடிவாக, சென்னை ராஜ்ய மில்களையாவது கட் டுப்படுத்த முடியுமா?' என்ற கேள்விக்கு, மிகவும் கோழைபோல், பொதுமக்களிடம் வேண்டிக் கொள் வதாகத் தெரிவித்திருப்பது எந்த ஆட்சியாளரின் லட் சணம் என்பது விளங்கவில்லை.

தன்னுடைய அதிகாரத்திற்குற்பட்ட மாகாணத் தின் மில்களைக்கூட கட்டுப்படுத்த முடியாத நிலையில், எடுபிடியாக, முதலாளிகளின் கைக்கூலியாக இயங் கும் ஆச்சாரியார், ஆட்சி சூத்தனமாக மத்திய சர்க்கார் திரியின் கருத்தை ஏன் எதிர்க்க வேண்டுமென்பது மக்களின் சந்தேகமாக யிருக்கிறது!

அந்தப்படியாக சந்தேகப்படும் பொதுமக்களுக்கு நாம் தெரிவித்துக் கொள்வதெல்லாம் இதுதான். நீங் கள் ஆச்சாரியாரை நம்பவேண்டாம். அவர் உங்களுக்கு பரிந்துபேசுவதாக சில சமயங்களில் விளம்பரப்படுத்து வதுவெறும் நடிப்புதான்! ஏதாவது உங்களுக்குபிடித்த மான வகையிலே கவனத்தைத் திருப்பி, வரப்போகும் தேர்தலில் ஒரு கை பார்க்கலாம் என்ற எண்ணம்தான்.

தோழர் ஆச்சாரியார் கடைசியாகக் குறிப்பிட் டிருப்பது தான் முக்கியமானது. "மத்திய சர்க்காரு டன் போராட வேண்டுமானால், ஒரு தடவைக்கு நூறு தடவை கவனிக்க வேண்டிய விஷயமாகும்" இதைப் பலமுறை படித்துப்பார்த்தால், இந்த ஆச்சாரி யாரால் ஒன்றும் செய்ய முடியாது என்பது நன்றாகத் தெரிகிறது.

நம் மகாண மக்களுக் கெதிர்ப்படும் எத்தகைய கஷ்டமாவது, மத்திய சர்க்காரைப் பின்னியிராமல் இருக்கிறதா?

மத்திய சர்க்காரை எதிர்ப்பதென்பது ஆச்சாரி யாரால் முடியாதாம்.

மத்திய சர்க்காரை எதிர்த்துப் போரடினா லொழிய எந்த விதத்தினாலும் நமக்கு விமோசனம் உண்டாகப் போவதில்லை.

இந்த சக்கரவட்டத்திலே சுற்றிக் கொண்டிருக் கும் நமக்காக, உண்மையாகப் பாடுபடுபவர் யார் என்று நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்!

உங்களுக்காகப் பரிந்து பேசும் தோழர்கள் மத் திய சர்க்காரை எதிர்க்கத் துணிவுள்ளவர்களா என் பதுதான் கவனிக்கப்படவேண்டியது.

அப்படிக்கில்லாதவர்கள்,

புருட்டஸ்கள்!
மீர்ஜாபர்கள்!
ஜூடாஸ்கள்!
வெங்கண்ணாக்கள்!
பூர்ணையா கும்பல்கள்!

கூட இருந்துக் குலவி குடிகெடுக்கும் எத்தர்கள்!

ஆகவே, ஏமாறவேண்டாம்! ஆச்சாரியாரின் புதிய தந்திரம் பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால் அதற்கும் காலம் கடந்த குறை, மக்களின் எழுச்சியை தப்பாகக் கணக்குப் போட்டதின் விளைவு.

அதிருப்திக் குரல் எழுப்பி புரண்டோடும் வெள் ளத்தைக் கடக்க, ஆச்சாரியார் உபயோகிக்க நினைப்பது வெறும் காகிதப் படகு!

காகிதப் படகு வெள்ளத்தைக் கடக்க தைரிய மளிக்கலாம்! இடையில் அதுவே கிழிந்து விட்டால், யார்தான் பொறுப்பாளியாக முடியும்? நாட்டு மக் களின் இன்னலை நேரில் காணும் ஆச்சாரியார் போன்றவர்களே மனமறிந்த ஏமாற்று வித்தையை கையாள நினைப்பது, மற்றவனின் ஏஜெண்டாயிருந்து அவனைத் திருப்திசெய்ய வேண்டியிருப்பதால்தானே ஏஜெண்டு என்ற நிலைமாறி எஜமானனாகி விட்டால்...

ஆச்சாரியார் போன்றவர்களை இந்த நிலைக்கு மேலதிகாரத்திற்காக நடுங்காத நிலைக்கு உயர்த்தி நாமார்க்கும் 'குடியல்லோம் என்ற கீதம்' தெற்கின் மக்களை முடிக்க வைப்பதுதான்பிரிவினை இயக்கத்தின் ரகசியம்!

'ஆச்சாரியார் நடுத்தாலும் அவருக்குப் பிறகு வருபவராவது அடிமை நிலையொழித்த தன்மானமுள் ளவராக விளங்கியே தீரவேண்டும் என்ற சபதத்தை இந்தப் பிரிவினை வாரத்தில் உறுதியாக்குவோமாக!

★

## வேல்ஸ் தரும்—தொடர்ச்சி

வேண்டுமென்றே வேத சாஸ்திரங்களை மறுப்பதாக ஆஸ்தீகர்கள் பழி சுமத்துகிறார்கள்! உண்மை என்னவென்றால் நாஸ்தீகன் தன்னுடைய பகுத்தறிவுக்குச் சரி என்றும் உண்மை என்றும் மட்டுமேதான் நம்புகிறான்! சாதாரண மக்கள் பின்பற்றும் மதங்கள் அவனது பகுத்தறிவிற்கு பொய் என்று தோன்றுவதாலும்-அப்படித் தோன்றுகின்ற மதம் மக்களுக்கு எந்தவித நன்மையையும் தாராதென்றும், தீமையையே தருமென்றும் அவன் நம்புவதாலும்—அனுபவத்தில் காண்பதாலும்—நாஸ்தீகன் அதை அடியோடு மறுப்பதோடு எதிர்க்கவும் செய்கிறான்!

அது மட்டுமல்ல, தன்னுடைய பகுத்தறிவிற்கு சரி என்று படுபவைகளை வெளிப்படையாக கூறி, அவைகளை பகிரங்கமாக பிரசாரம் செய்யும் நாஸ்தீகன் மிகவும் ஒழுங்காகவே நடக்கிறான்! இது சம்பந்தப்பட்ட வரையில் ஒரு போப்புக்கோ அல்லது ஒரு மதகுருமாருக்கோ உள்ள பெருமை அவனுக்குண்டு.

நாஸ்தீகர்களெல்லாம், சுயநலக்காரர்கள்—நெறியற்றவர்கள் என்று குறைகூறுவது கொஞ்சமும் அறிவற்றவர்கள் கூறுவதாகும். ஏனென்றால் 'அபேதவாதிகளெல்லாம் சுயநலக்காரர்கள், நெறியற்றவர்கள், என்று குறைகூறுவதற்கு ஒப்பாக இருக்கிறது! உண்மையில் நாஸ்தீகர்களையும், அபேதவாதத் தலைவர்களையும், மக்கள் ஆதரிப்பதுமில்லை மதிப்பதுமில்லை. மாறாக பழிக்கவும் வெறுக்கவுமே செய்கிறார்கள்! ஆகவே பொதுஜன மதிப்பில்லாத இந்த பழியினாலும், வெறுப்பினாலும் நாஸ்தீகர்களுக்கு எந்த விதமான சுயநலமோ, பெருமையோ இருக்க முடியுமா?

"பொதுஜன மதிப்பை இழக்கவோ, ஜாதிப் பிரஷ்டனாகவோ, பொருளை இழக்கவோ, நீ விரும்பினால் மட்டுமே நாஸ்தீகன் அல்லது அபேதவாதி என்று பெயர் எடு" என்றார் ஒரு பெரியார்! அப்படியிருக்க இதில் ஒரு மனிதனுக்கு சுயநலம் இருக்குமா? ஆகவே நாஸ்தீகனால் ஒருவன் எத்தகைய இலாபமும் அடையமாட்டான்-நாஸ்தீகன் என்று பெயரெடுப்பது ஒரு மகத்தானதும் கீர்த்தி தரக்கூடியதுமான செயலல்ல!

'வேத உண்மையை மறுப்பவர்களுக்கெல்லாம் நாஸ்தீகப் பட்டம் சூட்டுவது தன் முக்கிய கடமை என்று ஆஸ்தீகன் எண்ணுகிறான்! கடவுளைச் காப்பாற்றுவதும், நாஸ்தீகனை பழி வாங்குவதும் தன் கடமை என ஆஸ்தீகன் கருதுகிறான்! மற்ற மத வாதிகளும் அவ்வாறே எண்ணுகிறார்கள்!

இந்த குரூர நம்பிக்கையில் நடந்த போர்கள் எத்தனை! 'கடவுளைக் காப்பாற்ற'ப் புறப்பட்டவர்களில் கொல்லப் பட்டவர்கள் எவ்வளவு பேர்! கொடுமை செய்யப்பட்டவர்கள்-சித்திரவதை செய்யப்பட்டவர்கள்—எவ்வளவு பேர்!

இந்த மூட ஜன்மங்களின் பாதுகாப்பை விரும்புமளவுக்கு 'கடவுள்' பல மற்றவரா? தன்னை எதிர்ப்பவர்களையெல்லாம் கொல்லவும் பழி வாங்கவும் முடியாது கூலிகளை நியமிக்க வேண்டிய அளவுக்கு அவர் சக்தியற்றவரா?.........

கடவுளைக் காப்பாற்ற ஆத்திரம் கொள்ளும் ஆஸ்தீக நண்பனே! பகுத்தறிவாளரிடத்தில் நீ கொண்டுள்ள வெறுப்பு எவ்வளவு கொடுமையானது என்பதை எப்பொழுதாவது நீ சிந்தித்ததுண்டா?

உலக நாகரீகத்தின் உண்மையான சரித்திரம் என்ன? பகுத்தறிவுவாதிகள் நாஸ்தீகர்கள். இவர்களுடைய வெற்றியே உலகின் உண்மைச் சரித்திரம்! அவர்கள் பொய் நம்பிக்கைகளை மறுத்ததாலேயே உண்மை வெளிப்பட்டு உலகம் நாகரீகமடைந்து வருகிறது!

அக்காலத்தில் வாழ்ந்த ஆஸ்தீகக் கொள்கையுடைய 'புண்ணிய ஆத்மாக்கள்' உண்மையை வெளியாக்க பாடுபட்ட பகுத்தறிவு வாதிகளையும் நாஸ்திகர்களையும் தூற்றினார்கள். சித்திரவதைசெய்தார்கள். கொடுமை புரிந்தார்கள் கல் நெஞ்சோடு கழுவேற்றினார்கள் கொன்று குவித்தார்கள். 'அந்த ஆஸ்தீகர்களின்' சந்ததிகளோ கர்ண பரம்பரைச் செய்திகளை எல்லாம் உண்மை என்று நம்பினார்கள். ஆனாலும் அவைகளைத் தைரியமாக மறுத்துக் கூறி இறந்துவிட்ட பகுத்தறிவு வாதிகளையெல்லாம் இப்போது வாழ்த்துகிறார்கள்! ஆனால் இப்போது உண்மையை தெளிவு படுத்துவதற்கு பாடுபட்டுக் கொண்டு உயிருடனிருக்கும் பகுத்தறிவு வாதிகளை யெல்லாம் குறை கூறுகிறார்கள்!

சூரிய மண்டல உண்மைகளை முதன் முதல் வெளியிட்ட கோபர்நிகஸ் சமுதாயப் பிரஷ்டரானார்! இப்பொழுதோ பூமி சூரியனை சுற்றி வருகிறதென்று எல்லா மக்களும் நம்புகிறார்கள். முன்பு தூற்றப்பட்ட கோபர் நிக்கஸ் பெயரும் இப்போது போற்றப்படுகிறது!

ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சூரியனுக்கு ஒப்பானது என்றுமுதன்முதல் கூறிய புருனோ கொளுத்தப்பட்டார் உயிரோடு!

வான மண்டல உண்மைகளை வெளியிட்டு; பாதிரிகளின் குருட்டு நம்பிக்கைகளை யொழித்த காலிலியோ சிறையில் தள்ளி சித்திரவதை செய்யப்பட்டார்! இப்போது அதே கிருத்துவர்கள் காலிலியோ கூறியவைகள் எல்லாம் உண்மை என்று ஒப்புக் கொள்கிறார்கள். அவரது பெயரும் இப்போது போற்றப் படுகிறது!

இவ்வாறு ஆராய முற்பட்டால் பகுத்தறிவாதிகள், நாஸ்தீகர்கள். என்பவர்கள் கூறியவைகளே உண்மை யென்றும் மதவாதிகள் ஆஸ்தீகர்கள் என்பவர்கள் கூறுபவைகள் பொய் என்றும் விளக்க ஆயிரமாயிரம் ஆதாரங்களை எடுத்துக்காட்டலாம்!

இப்போது நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாக வைதீகர்கள் பின்நோக்கி சென்று கொண்டே இருக்கின்றார்கள். காலம் மாற மாற விஞ்ஞானக் கருத்துக்களை ஆஸ்தீகர்களும் வைதீகர்களும் ஒப்புக் கொண்டு தான் வருகிறார்கள்! ஆனாலும் ஆஸ்தீகர்கள் நாஸ்தீகர்களை வெறுக்கிறார்கள்—அவர்களைத் தூற்றுவதே தங்கள் முக்கிய கடமை என்று கருதுகிறார்கள்!

அறிஞர் டார்வினின் கொள்கைகளை நாஸ்தீகக் கொள்கை, மூடக் கொள்கை, என்று வெறுத்தவாகள் இப்போது அந்த பரிணாம வாதத்தை மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறார்கள்!

உண்மை ஆராய்ச்சியாளர்களை இருநூறு ஆண்டுகளாக சித்திரவதை செய்தும், கொலை செய்தும், வந்த ஆஸ்தீகன் இன்னும் திருப்தியடையவில்லை! மதப்புரட்டுகளையும், வேதப் புரட்டுகளையும், புராணப் புரட்டுகளையும், ஒழிக்க முன் வருகிறவர்களை நாஸ்தீகர்கள் என்று ஆஸ்தீகன் இப்போதும் கூறிக் கொண்டு தானிருக்கிறான்!

உதாரணமாக கிருத்துவர் அல்லாத ஆண்களும், பெண்களும் எரி நகரத்திலாழ்ந்து தவிப்பார்கள் என்று கூறுகிறார்கள். இது மூடநம்பிக்கை என்று எடுத்துக் காட்டினால் அவர்களுக்குப் பிடிக்கவில்லை!

'ஞான நீராட்டல்' பெறாத குழந்தைகள் எல்லாம் நரகம் புகுவார்கள் என்று கிருத்துவர்கள் நம்பினார்கள். அது மூட நம்பிக்கை என்று கூறினால் அவர்களுக்கு கோபம் வருகிறது!......

மந்திர வாதத்திலும், சூனியத்திலும் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. ஆனாலும் ஆயிரமாயிரம் மந்திரவாதிகளையும், சூனியக்காரர்களையும் அவர்கள் நெருப்பிலிட்டுப் பொசுக்கினார்கள். இப்பொழுதோமந்திரவாதத்தைப்பற்றி பேசினால் அதே கிருத்துவர்களுக்கு வெறுப்புண்டாகிறது. மந்திரவாதிகளை அஞ்ஞானிகள் என்கிறார்கள்!

ஆதாம், ஏவாள், பிரளயம் முதலிய புராணக் கதைகளை அவர்கள் நம்பினார்கள். இப்பொழுதோ அவைகள் எல்லாம் உபமான கட்டுக்கதைகள் என்று கூற முன்வந்து விட்டார்கள்

ஆறுநாட்களில் உலகம் உருவாக்கப்பட்டது என்று அவர்கள் நம்பினார்கள். ஆனல் இப்பொழுதோ விஞ்ஞானக் கொள்கைகளை மெல்ல மெல்ல ஏற்றுக் கொள்கிறார்கள்!

ஏ! ஆஸ்திக நண்பர்களே! நாஸ்தீகம் எனப்பட்டவைகளே இப்போது வைதீகமாக இருக்கின்றன என்பதை நீங்கள் உணரவில்லையா? நாஸ்தீகன் என்று கொடுமை செய்யப்பட்டவர்கள் கூறியவைகள் எல்லாம் இப்போது உண்மை என்று ஒப்புக்கொள்ளப்படவில்லையா? இன்று அவைகளைப் பள்ளி மாணவர்களுக்கு பாடமாக மாணவர்களாலேயே கற்பிக்கப்படவில்லையா?

இப்போது உண்மை என்று நம்பப்படுபவைகளை முன்னூறு ஆண்டுகட்கு முன்பு யார் கூறியிருந்தாலும் அவர்கள் அப்போது கொல்லப் பட்டே இருப்பார்கள் அல்லவா? ஆனாலும், ஒரு நூற்றாண்டுக்குப் பின் உண்மை என்று ஒப்புக்கொள்ளப்படுபவைகளை முன்பாகவே கூறுவோரை நீ நாஸ்தீகன் என்று அழைக்கிறாய்!

விஞ்ஞானத்திலிருந்தும், சரித்திரத்திலிருந்தும், தத்துவ எட்டிலிருந்தும் நீ எதையும் தெரிந்து கொள்ளவில்லை! நேற்று நம்ப முடியாததாக இருந்தது இன்று நம்பப் படுவதை நீ உணரவில்லை. இன்று நம்ப முடியாததாக இருப்பது நாளை நம்மப்படுவது உறுதி;

சுதந்திரச் சிந்தனை செய்து சுதந்திரமாகப் பேசிய பகுத்தறிவு வாதிகளாலேயே உலக நாகரீகம் உருப் பெற்றிருக்கிறது! உருப்பெற்றும் வருகிறது. அவர்கள் உயிருடன் வாழ்ந்தபோது நாஸ்தீகர் என்று வெறுக்கப்பட்டார்கள். ஆனல் அவர்களெல்லாம் இப்பொழுது உலக நன்மைக்கு உழைத்த உத்தமர்களென மதிக்கப்படுகின்றனர்! இன்றைய நாஸ்திகர்களும் பிறகு அப்படி தான் ஆவார்கள்!

ஆஸ்திக நண்பர்களே! நபர்களிடையே எத்தனையோ உத்தமர்கள் இந்தப் பட்டம் பெற்றிருக்கிறார்கள்! ஆகவே நீ கூறும் பழிப்புரையை புன்னகையுடன் ஏற்றுக் கொள்கிறோம் "கடவுளைக் காப்பாற்ற"ப் போராடும் கோஷ்டியினரே! நாங்கள் உங்களிடம் கோபம் கொள்ளவில்லை! உங்களுடைய அறிவின்மையையும் ஆத்திரத்தையும் கண்டு பரிதாபப் படுகிறோம்...!" எனவே திராவிட சுதந்திர ஆட்சியில் "போலி ஆத்திகம்" முறியடிக்கப்பட்டு—மக்கள் மடமையிலிருந்து விடுபடுவார்களென்பது உறுதி.

★


## தோழர்களே நினைவில் வையுங்கள்

## 20—9—52-ந் தேதி

### மகத்தான சோதனை நாள்

காங்கிரசின் ஆதிக்கத்தை முறியடிக்க, முற்போக்கு சக்திகளின் ஒன்றுபட்ட முயற்சியான நகர மக்கள் கூட்டணி அபேட்சகர்களுக்குப் **புலி** சின்னமுள்ள பெட்டியில் வோட்டுகளை வழங்குவீர்களாக.

| | | |
|---|---|---|
| 20. செம்பியம் | ... | காஞ்சி. மணிமொழியார் |
| ,, (தனித்தொகுதி) | ... | எம். குருநாதன் |
| 21. அயன்புரம் | ... | பக்தவத்சலம் |
| 22. கீழ்ப்பாக்கம் | ... | எம். பாலசுப்ரமண்யம் |
| 29. நேப்பியர்பார்க் | ... | அ. பொ. அரசு (பரத்வாசன்) |
| 30. சிந்தாதரிப்பேட்டை | ... | பொன்னுரங்கம் |
| 31. கோமளீஸ்வரன்பேட் | ... | சம்பத்து |
| 33. ஆயிரம் விளக்கு | ... | கே. மாணிக்கவாசகம் |
| 34. நுங்கம்பாக்கம் | ... | வே. சுப்ரமண்யம் |
| ,, (தனித்தொகுதி) | ... | எ. கே. சாமி |
| 35. கோடம்பாக்கம் | ... | கே. விநயகம் |

அன்புமிக்க வாக்காளர்களே, 20-ந் தேதியன்று முற்போக்கு சக்திகளின் கூட்டு முயற்சிக்குப் பேராதரவு தருவீர்களாக. —நகர மக்கள் கூட்டணி.



"திராவிடன்" சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு சந்தா | ... | ரூ. | 6—0—0 |
| ஆறுமாதம் | ... | ,, | 3—0—0 |
| தனிப்பிரதி | ... | ,, | 0—2—0 |
| வெளிநாடு | ... | | [illegible] |

இன்ப உலகு—தொடர்ச்சி

...ளர்க்கிறர்? இதிலே ஏதோ சூது இருக்கிறது. ...றையிலே கிடக்கும் 'கைதி'யின் நிலைதான் என் ...லை. வெளியுலகைக் காணவேண்டும்'' என்று எண்ணுவானுயினன். பனி பெய்தலால் உடலெல்லாம் குளிர்ந்திருந்து உள்ளம் மட்டுமே குமுறிக் கொண்டிருந்தது. எழுந்து, மாளிகை நோக்கி நடந்தான். மஞ்சத்திலே சாய்ந்தான். ஆனல் தூக்கம் மட்டும் வரவேயில்லை. இரவு முழுவதும் உறங்காமல் மாளிகையுள் சிந்தித்த வண்ணமே உலவிக் கொண்டிருந்தான். மாளிகையில் கிளம்பும் மணம், யாழிசை, குழலிசை, ஆடல் எவையும் இன்ப மூட்டவில்லை. அவைகளை வெறுத்தான்.

## ஓர் மாலை

மாலைநேரம்! சித்தார்த்தன் தன் தேர்ப்பாகனை அழைத்தான் ''சன்ன! தேரிலே குதிரைகளைப் பூட்டு என்றான்'' பாகன் தயங்கினன். ஆனல் அவன் சொல்லைத் தட்டி நடக்க முடியாதே! குதிரைகள் பூட்டப்பட்ட தேர் வெளிவாயிலை யடைந்தது. தேரிலே சித்தார்த்தன் வீற்றிருந்த வண்ணம் வெளியுலகை ஆராயச் செல்கிறோம் என்ற எண்ணத்தில் மகிழ்ந்தான்; சிரித்தான். ஆனல் சில விநாடிகள் முகம் மாறுபட்டது. ஓர் முதியவர் கூனித் தளர்ந்த நடையில், தடியூன்றி நடந்து சென்றார். அக்காட்சியைக் கண்ட அவர் மனம் நெகிழ்ச்சி யடைந்தது. இரக்கம் பிறந்தது. அடுத்து ஓர் தெருக்கோடியில் ஒருவன் காச நோயால் பீடிக்கப்பட்டவன்; அரையாடை அணிந்திருந்தான். 'லொக்...லொக்' என்று இருமிக் கொண்டிருந்தான். வயிறு ஒட்டி, கண்கள் ஒளியிழந்து, உயிரோடு போராடிக் கொண்டிருந்தான் ஆதரவற்று. சித்தார்த்தன் கண்கள் அகல விரிந்தன.

''சன்ன இதுவென்ன துன்பக் காட்சி''?

''அரசே, அவன் தலைவிதி. என்ன பாவம் செய்தானே முன் ஜென்மத்தில் இப்போது அனுபவிக்கிறன்'' வருத்தத்தோடு சிறிது நகைப்பும் தோன்றியது. தேர்ப்பாகனின் அறியாமைக்கு வருந்தினன். அடுத்து ஓர் பிச்சைக்காரன்...அடி வயிற்றைப் பிசைந்து கொண்டு ஓர் வீட்டில் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். தேர் சென்று கொண்டிருந்தது. சித்தார்த்தன் ''சன்ன, இவன் ஏன் பிச்சை யெடுக்கிறன்?'' என்றான்.

''அது, அவன் கர்மவினை அரசே...'' என மறுமொழி கூறினன் பாகன். தேர் கோவில் வழியாகச் சென்று கொண்டிருந்தது. ஆங்கு ஆலமரத்தடியில் ஓமகுண்டத்தின் முன்பு கொழுத்த உருவங்கள் 'கர்மூர்'......என ஒலித்துக் கொண்டிருந்தன. ''இவர்கள் ஏன் இப்படி யிருக்கிறர்கள்...இது என்ன...'' மீண்டும் கேள்வியைத் தொடர்ந்தான் இளவரசன். ''அவர்கள் ஆண்டவனின் தூதுவர்கள். பக்தியால், யாகயோகத்தால், வேத வேள்வியால், ஆண்டவன் அருளைப் பெற்று நாட்டை நல்வழியில் செலுத்துவோர்'' என்று பதில் கூறினன் தேர்ப்பாகன் சன்னன். அவன் அறியாமைக்கு மிகவும் வருந்தினன் இளங்கோ. ஓமகுண்டத்தின் முன், தானிய மூட்டைகள், நெய்க் குடங்கள், அமைதியே உருவெடுத்த ஆட்டுக் கூட்டங்கள்......''ஐயோ இவைகளெல்லாம் துடிக்கத் துடிக்க கொல்லப்படுவதா... என்ன துன்ப நிலை'' என அவனுள்ளம் கதறியது. இத்துன்ப எண்ணங்களைச் சுமந்து கொண்டு வந்தான் சித்தார்த்தன். மாளிகையுள் நுழைந்தான்; மனம் மாறுபாடடைந்து ஒருவகைப் பித்து அவனைப் பிடித்துக் கொண்டது.

ஓர் புறம் பசியால் வாடும் பரிதாப மனிதர். மறுபுறம் பலியால் துடிக்கும் பகுத்தறிவற்ற உயிரினம்; நோயினல் வாடும் மனிதன் ஓர்புறம், வீணர்களின் வேள்வி மற்ரேர்புறம், நெருப்பில் கொட்டிப் பாழாக்கப்படும் உணவுப் பொருள்கள். இந்நிலையை விரும்பேன் என்ற சிந்தனையோடு தன் அறையை அடைந்தான்.

தாதியிடையாள் ஒருவள் ஓடோடி வந்தாள். தங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்று கூறிக்கொண்டே பால் கிண்ணத்தை அவன் முன் வைத்தாள். அவன் முகத்திலே மகிழ்ச்சி மலரவில்லை பொலிவிழந்து காணப்பட்டான். 'திடீ'ரென எழுந்தான் ''சன்ன ஓடு ஓடு, நான் ஆணையிட்டதாகக் கூறு. அந்த ஆட்டுக் கூட்டத்தைக் கொல்லக் கூடாதென்று கூறு. போ, அவைகளைக் காப்பாற்று'' சித்தார்த்தன் நிலை கண்டு சன்னன் கண்ணீரைச் சிந்திய வண்ணம் அங்கிருந்து நீங்கினன். அப்பாவையோ, அக்கட்டிளங்காளையின் அழகைக் கண்டு மகிழ்ந்தாள். இப்பேர்ப்பட்ட சித்தார்த்தனை மகனுகப் பெற்ற மன்னனை வாழ்த்தினள்.

சித்தார்த்தன் முன்போல சிறு பிள்ளையா? தந்தை நிலையடைந்து விட்டான். நாட்கள் நகர்ந்தன. இல்லறத்தை இடும்பை தரும் சிறைவாழ்வெனக் கருதினன். இந்நிலைக்குக் கொண்டு வந்தது அவன் தந்தையின் கட்டுப்பாடே! வெளியுலகில் கண்ட காட்சிகளோடு தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்தான். மக்கள் விருப்பத்தை ஆய்ந்து பார்த்தான். மனப் போராட்டம் மணி மாளிகை, மழலை மொழிக் குழந்தை, மனைவி அவன் மனத்தே வட்டமிட்டது. இன்ப எண்ணங்களுக்கு அடிமையாகி விடவில்லை. வெளியேறுவதென்று உறுதி கொண்டான், மக்களுக்குத் தொண்டாற்றுவது என்ற 'நல்ல முடிவு' அவன் உள்ளத்தே மலர்ந்தது. வெளியுலகு—நாடு அழைக்கிறது; அன்பழைப்பு விடுக்கின்றது. நாட்டைச் சுற்றிப் பார்க்கும் போது கண்ட காட்சிகள் நாட்டின் நிலையை நன்கு எடுத்துக் காட்டுகிறது—காட்டி விட்டது. பசி, பிணி, சாக்காடு, திறமையற்ற ஆட்சியின் அலங்கோலத்தைத் தானே காட்டுகிறது. ஆம்!

---

# திராவிடமே!

''சக்திச்சுடர்''

★

இருண்டிருக்கும் திராவிடமே உனைநினைத்தால்
என்கண்மணர் நீர்பெருக்கும்; பள்ளம் நோக்கி
உருண்டுவிட்டாய்; மதமென்னும் உலுத்தர்
[சூழ்ச்சிக்
குட்பட்டாய்; ஓரேமனிதர் என்ற கொள்கை
புரண்டுவிட்டாய்; பன்னூறு சாதி யுன்மேல்
புகுத்திவிட்டார்; மாத்தமிழர் அவற்றை
[எல்லாம்
திரண்டிருந்தும் பார்த்துள்ளார் வெட்கம் இல்லை
தினவெடுக்கும் தோள்களிலோ வீரம் இல்லை!

கைகொட்டிச் சிரிக்கின்றார் மேலை நாட்டார்
கண்ணிருந்தும் குருடாய்நீ வாழ்தல் கண்டும்!
பொய்கொட்டும் புராணங்கள், வேதம் சற்றும்
பொருந்தாத சாத்திரங்கள், பாமாய் எங்கும்
வைகின்ற கடவுளரின் விளையாடல்கள்
வயிறு வளர்க்கின்றகதா காலட்சேபம்
சைகின்ற தமிழ்நாடே. நோக்கும் எங்கும்
நடக்கத்தான் காண்கின்றேன்! சொரிந்தேன்
[கண்ணீர்

அந்தோ என் தமிழ்த் துணைவர் அழிந்தார்;
[இங்கே
அறிஞரென்பாரே அற்றனரோ? வெட்கக் கேடு!
'தந்தோம் தோம் திமிதோம்' என்றயலார் கீழே
தாளம் போட் டிருக்கின்றார்; ஆரியர்தம்
செந்தோளின் திறமடக்கி அந்நாள் கற்புத்
தேவிக்குச் சிலையெடுத்தோர் இந்நாள் இங்கு
வந்தோர்க்குப் பணிசெய்தே வாழுகின்றார்!
வாயில்லாப் பூச்சிகளோ அவர்கள் ஆனர்?

சொல்கின்றேன்: இனியும் தான் சோர்வு
[வேண்டாம்
துடித்தெழுக; பகையெல்லாம் தூள் தூள் ஆக்கி
வெல்கின்ற வகைகாண வேண்டும்; வில்லில்
விரைகின்ற அம்பாகக் குறிக்கோள் நோக்கிச்
செல்கின்ற பட்டாளம் வேண்டும்; அங்கே
செந்நீரைச சிந்திடினும் கலங்கா நெஞ்சம்
கொள்கின்ற மறவர்தான் அணியில் தேவை!
கொள்கையுற்ற திராவிடமே அதுதான் சேவை!

---

ஆரியம் அரசபீடத்தில் வீற்றிருப்பதன் விளைவு. மக்கள் உழைப்பால், சிந்திய வியர்வையால் தோன்றிய பொருள்கள் ஆண்டவனுக்குக் காணிக்கையாக்கப் படுகிறது. ஆனல் அவர்கள் நிலை? ஆகவேதான் சித்தார்த்தர் உள்ளம் அமைதியை நாடி ஓடிற்று.

## இன்ப இரவு

கார்இருள்! மாளிகையின் உட்புறத்தில், விளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டிருந்தன. நறும் புகை மணம் மெல்ல அடங்குவதாயிற்று. தங்க மணி மஞ்சத்தில் மங்கை நல்லாள்— இளவரசனின் மனைவி துயின்றிருந்தாள். அவள் மார்பணைந்து துயின்று கொண்டிருந்தது அவள் பச்சிளங் குழந்தை. தோழிகள் தங்கள் ஆடைகள் நெகிழ, உறக்கத்தில் ஆழ்ந்திருந்தனர் உணர்வற்ற சிலைகள்போல. எங்கும் அமைதி. சித்தார்த்தனுக்கு மட்டும் அமைதியில்லை இதே போன்ற அமைதிக் காட்சியை நாடெங்கும் காண விரும்பிய அவன் உள்ளத்திலே எங்ஙனம் அமைதி தோன்ற இயலும்? ஓர் முடிவுக்கு வந்துவிட்டான். ''பொறுத்தது போதும்; புறப்படுவோம் இனி பொதுமக்கள் உள்ளம் நோக்கி'' என்றது அவன் உள்ளம். எழுந்தான் ஒரு முறை தன் மனைவியை, எதிர்கால இன்பச் சுரங்கம்—தன் குழந்தையை நோக்கினன். அவர்களை முத்தமிட அவன் உதடுகள் துடித்தன. ஆனல் உள்ளத்திலே தோன்றிய உறுதி தடுத்து நிறுத்தியது. ''இன்பமே... நான் வெளியேறுகிறேன்; துன்பஉலகம் நோக்கி—இன்ப உலகைக் காண. அமைதி கண்ட பின்னர் உங்களை யடைவேன்...யசோதரா என் அன்புப் பெட்டகமே நீ வருந்தற்க என்னை மன்னித்துவிடு. குழந்தையை நன்றாக கவனித்துக் கோள். துரோகியே உன் தோகை மயிலாளைத் துடித்துடிக்க விட்டு துயின்ற நேரத்திலே ஓடிவிட்டாயே உன்மத்தனே...என்று தூற்றுகிறயா சே...சே நீ நல்லவளாயிற்றே. நான் என்ன செய்வேன். 'கூண்டுக் கிளியாக' இருந்ததன் விளைவுதானே இது!'' என்று கூவவில்லை அவன்; உதட்டின் அசைவில் மெல்ல உதிர்ந்தன சொற்கள்; தரையில் விழும் மலர்கள் போன்று!

## புத்துணர்வு

வெளியேறுகிறான், தன் அன்பு மனையாளை விடுத்து-குழந்தையைப் புறக்கணித்து—மழலை மொழிகளை மறந்து, இது நாள் வரை இல்லறம் என்ற 'இன்ப உலகில்' உலவியவன், இன்ப உலகு வேறு என்பதை உணர்ந்தான். காவலாளர் அனைவரும் 'தூக்க உலகில்' குடியேறிவிட்டனர். ஆனல் தேர்ப்பாகன் சன்னன் மட்டும் துணையாக இருந்தான்.

தேர் பூட்டப்பட்டுவிட்டது. சித்தார்த்தனை—எதிர்கால புத்தனை இழுத்துச் சென்றது குதிரைகள். மாளிகை யடுத்த சாலைகளின் வழியாகச் சென்று நகரின் எல்லையை அடைந்தது தேர். மீண்டும் காட்டுப்பாதை வழியாகச்சென்று கொண்டிருந்தது தேர். பாகன் குளிரால் நடுங்கிக்கொண்டே தேரைச் செலுத்தினன். ஆனல் சித்தார்த்தருக்கு அக்குளிர் மிகவும் இன்பமாக இருந்தது. ஆந்தையின் அலறல்—கோட்டானின் குரல் வீணையின் ஒலியாக-குழலின் இசையாகத் தோன்றியது. ஓரிடத்திலே தேர் நிறுத்தப்பட்டது. ஓர் அறங்கோட்டம். அதுவும் பாழடைந்த கோட்டம். அங்கே எண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் மருங்கே பேசிக் கொண்டே யிருந்தனர். சன்னன் கண்கள் நீரை வடித்துக் கொண்டே யிருந்தன. வழியும் கண்ணீரைத் துடைத்து சன்னனுக்கு ஆறுதல் மொழி கூறினர் சித்தார்த்தர். தன் பொன் அணிகளை நீக்கி, சன்னன் கரத்திலே வைத்தார். அவனை ஓர் முறை கட்டியணைத்தார். ''சன்ன கவலையை விடு. நான் எங்கும் சென்றுவிடமாட்டேன். மக்களுக்குப் பணியாற்றத் தான் புறப்பட்டுவிட்டேன், நல்ல முடிவைக்கண்ட பின் நகர் வருகிறேன். அதுவரை என் அன்புக் குழந்தையைக் காப்பாற்று. அவனோடு விளையாடு. என் அன்பு மனையாளுக்கு ஆறுதல் கூறு. என் இருப்பிடத்தை யறிவித்து என் அருமை நண்பன் உதயனை ஒரு முறை வந்து செல்லுமாறு கூறு. செல்...புறப்படு...

## இன்ப உலகு

இளவரசர் ''புத்தராக'' மாறிய செய்தியறிந்த அவர் துணைவியார் தாமும் அக்கொள்கையைப் பின்பற்றுவாராயினர். ''வேள்வி கடிந்த வேந்தர் புத்தரே, ஆரியத்தின் முதல் வைரி என்றனர் அறிஞர்கள். புத்தருக்கு எவரும் தீங்கு விளைவிக்கக் கூடாதென்பது அரசியல் சட்டமாக மாறியது. மன்பதை துறந்து காடே கதியென எண்ணிக் கடுந்தவம் புரியவில்லை. நாட்டிலேதான் உலவினர். தன் மாளிகைக்கு வருவார். மனைவிக்கு அறவுரைகள் கூறுவார். மகனிடம் கொஞ்சுவார். அடுத்த நாழிகை புறப்பட்டு விடுவார் தன் கொள்கை பரப்ப. இன்ப உலகு—புதிய உலகு அவர் இதய ஒலி. அவ்வொலி எங்கும் எதிரொலித்தது, மேனாட்டிலுங்கூட.

திராவிட இயக்கம்—திராவிடத்திலே—சமுதாயத்துறையில்—புத்தரது கொள்கையைத்தான் பரப்பி வருகிறது. ஆனல் அதைக் கண்டு ஆரியம் முணுமுணுக்கிறது ஆட்சி பீடம் சீறுகிறது. புத்தர் போன்ற செம்மல்களின் கொள்கை வெற்றியுறும் காலத்தை நெருங்கச் செய்வதே திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையாகும்—திராவிடத் தனி அரசிலே—மக்கள் மன்றத்தில் ஆரியத்தின் அநாகரீகம் ஒழிந்து அறிவு ஒளி ஆனந்தக் கூத்தாடும்.

சிறுகதை

# அவள் ஓர் தியாகி!

வேலை—வாணன்

"வஞ்சகி! உல்லாசமாக உப்பரிகையிலே உலவி, ஊர் வாலிபர்களையெல்லாம் உந்தன் பருவ எழிலால் பாழாக்கிய பாதகி......"

"அத்தான்...வேண்டாம். வீணாக என்மீது பழி சுமத்தி என் வாழ்வை சீர்குலைக்காதீர்கள். நான் எதுமறியாதவள்."

"அஞ்சலி! நன்றாக யோசித்துப் பார். உன் வாழ்வே என் வாழ்வு என எண்ணி எனது இன்பங்களையெல்லாம் மறந்து விட்டு உன்னை என் இதயக் கோயிலில் அத்தை மகளாக வைத்துப் பூஜித்தேனே: அதற்கு நீ செய்யும் கைம்மாறு இது?"

"அத்தான்......"

"அத்தான்! அத்தான் என்று மாசுபடிந்த உன் வாயால் என்னை இனி அழைக்காதே. உன் காதலன் தினகரனோடு இனி நீ சென்று விடு."

★

அஞ்சலி! சஞ்சலம் கொஞ்சமும் இன்றி வாழும் வஞ்சி அவள். பருவ எழிலால், இளமையின் பூரிப்பால் இறுமாந்திருந்தவள். புதுமணம் மிக்கப் பூவாகப் பூத்துக் குலுங்கி, நறுமணம் வீசும் மலர்த் தோட்டத்தின் நடுவே போவோர் வருவோரைப் பார்த்து புன்னகை புரியும் அழகு மலர்தான் அவள்.

சிட்டுபோல் பறந்து வந்து சிறு குரும்பு பேசும் சிங்காரி அவள். துள்ளி ஓடும் புள்ளிமான்.

துடிதுடிக்கும் தேன்சுவைக் கனி இதழாள்! மணம் வீசும் மலர் தூவிய மெல்லிய மஞ்சத்திலே படுத்துப் புரளும் பாக்கியத்தைப் பெறாத பொற்கொடியாள். காலையிலே எழுந்தவுடன் கஞ்சிக்கு இல்லையே என ஏங்கிடும் 'கந்தன்' பரம்பரையைச் சேர்ந்தவள். அவள் அத்தான் இந்த நாட்டிலே ஒரு இளம் எழுத்தாளன். அவருக்குத் தோழர்கள் இந்தச் சதிகார உலகில் யாருமே கிடையாது. காகிதக் குப்பைகளும், சிறு பேனாவுந்தான் அவருக்கு ஆருயிர்த் தோழர்கள். அவருக்கு ஆறுதல் அளிக்க அஞ்சலி ஒருத்திதான் இருந்தாள்.

பட்டுப்பாவாடை உடுத்தி பரிமள கந்தம் பூசி பஞ்சணையிலே படுத்துப் புரளாத அப்பொற்கொடியாள் அத்தானிடம் சரிவர பேசுவதே இல்லை. 'நாணம்' என்ற துணி அவர்கள் இருவர்களுக்கிடையேயும் திரை போட்டது.

சந்திரன்! அவன்தான் அழகுராணி அஞ்சலியின் அத்தான். சமுதாயம் சீர்திருந்த அவன் ஓர் கண்ணாடி. கண்ணாடிபோல் பலருக்குப் பயன் பட்டான். அத்தை மகளை—ஆதரவற்றவளை—ஆதரித்தவன் சந்திரன் தான்.

பகுத்தறிவுப் பாசறையிலே பணியாற்றும் வீரவாலிபன். ஒரு கூட்டத்தில் அவன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது ஆளவந்தார்களின் அடக்குமுறையை அலட்சியப்படுத்திப் பேசியதாக வழக்குத் தொடர்ந்து அவனை சிறையில் அடைத்து விட்டனர்.

அஞ்சலி [illegible]

—துவண்டு போனாள். ஆனால் அவளின் காதலன்......

"அஞ்சலி! கலங்காதே. உன் வாழ்வு வளமாகத்தான் நான் இருக்கின்றேனே........."

"அன்பரே! எனது அத்தான் சிறையிலே...எவ்வளவு மானக்கேடு? மறக்க முடியவில்லையே அதை"

'அன்பே! அமைதிக்கு வழிதேடுவோம் வா...என்ன அஞ்சலி அழுகின்றாய்? ஈரமான சந்தனத்துப் பலகை போல், குளிர்ந்திருக்கும் உனது கன்னத்தில் இருந்து வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துக் கொள்'

"கண்ணாளரே! என்னை மறக்கமாட்டீர்களே......?"

"அஞ்சலி! முகிலைக் கிழித்துக் கொண்டு வெளிக் கிளம்பும் முழுமதி நீ. உனை மறப்பேனா?"

"அத்தான்......" அவள் அவன் மார்பின் மீது சாய்ந்தாள். மாசு மருவற்ற அந்த மங்கையின் உடல் மாற்றானின் மடிமீது விழுந்து விட்டது. இன்ப சாம்ராஜ்யத்தில் இணையிலாக் காதலர்களாகி விட்டனர்.

அஞ்சலியும் தினகரனும் செல்லாத சோலைகள் இல்லை. அனுபவிக்காத இன்பம் கிடையாது. இந்த அனுபவத்தின் அடையாளமாக அஞ்சலியின் அடிவயிற்றை அலங்கரித்தது ஒரு மாணிக்கம்!

தினகரன்! படுபாவி...... அந்த ஆணவப் பேயை, நாட்டைச் சூறையாடும் நயவஞ்சக விஷப்பூச்சை நம்பி மோசம் போனாள் அவள்.

ஆண்டவனின் அந்தரங்க சிடனாய்க் காட்சியளித்து, அரம்பையர்களின் கற்பைச் சூறையாடி சுகபோக வாழ்வு வாழும் சூதுக்காரன். சரசிகளுடன் சரசசல்லாபம் புரிந்துவிட்டு சந்து முனைகளிலே சிந்து பாடும் சீமான்களின் வாரிசு அவன்.

பரமனின் படிக்கட்டுக்களின் மீது ஏறி இறங்கும் புனித ஆத்மாக்கள் பலர் பூவையர்கட்கு வீபூதி அளித்து வீரமுடன் சோதிப்பார்கள் அவர்களின் கற்பை. அப்படிப்பட்டவர்களின் தோழன்தான் அவன்.

கருவுற்ற அஞ்சலியைக் கைவிட்டு விட்டு சாதகன் போய்விட்டான். ஆதரவற்ற அபலையாகி விட்டாள். அவள் அத்தான் சந்திரன் சிறையிலே சிக்கிச் சீரழிகின்றான்.

அஞ்சலி கண்ணீர் சிந்தினாள். நாட்கள் உருண்டு ஒரு மகனைப் பெற்று வளர்த்து வந்தாள். அவனது குதலைமொழிப் பேச்சுக்களைக் கேட்டு தனது மறைந்த துன்பங்களையெல்லாம் போக்கினாள்.

ஓர் நாள்......

சந்திரன் விடுதலையாகி வீடு நோக்கி விரைந்து வந்தான். அத்தை மகள் அஞ்லியைக்காண ஆவலோடு ஓடி வந்தான்.

அப்பொழுது அஞ்சலியின் குழந்தை அழுவதைக் கேட்டான். அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

அஞ்சலி! உள்ளே அழுவது யார்?

'அத்தான்! மடமையால் மதியிழந்து மாற்றானின்மடிமீது விழுந்த

குழந்தை அது. வஞ்சகத்தால் பின்னப்பட்ட வஞ்சி ஒருவளின் சேய் அது. பாகு மொழிகளினால் பாதகனின் அரவணைப்பிற்கு ஆளாகிய ஒரு அபலை பெற்றெடுத்தக் குழந்தை என்னை நம்புங்கள் அத்தான்.'

'உன்னைக் கெடுத்த அந்த துரோகி யார்?'

'அத்தான்...அவர்...அவர்......

அத்தான் என்று மீண்டும் அழைத்தால் உனது ஆவி அமர லோகத்தை எட்டிப் பார்க்கும். ஆதரவற்றஉன்னை அழைத்து வந்து அருகில் வைத்து நாட்டிற்குச் சேவை செய் என்றால் நயவஞ்சகனுடனா கட்டிலில் புரளுகின்றாய்? கன்னியர்கள் மடியே கதியென எண்ணி உன்னைக்கெடுத்த அந்தக் கயவன் யார்?'

'ஸ்ரீலஸ்ரீ கனம் பொருந்திய தினகா முதலி'

ஆ அந்தப் பாதகனா? அந்தப் பழிகாரப் பிண்டமா? வீட்டிலே யோகம் வெளியிலே போகம். உள்ளே ஆண்டவன் வணங்க, வெளியே அரம்பையர் கொஞ்ச அப்படிப் பட்டவனையா நீ காதலித்தாய்?'

அத்தான் அறிவை இழந்து அந்த அறிவிலிக்கு என் கற்பை விலை கூறி விட்டேன். சூதறியாத நான் அந்தச் சூதுக்காரனுக்கு என் பெண்மையை பேரம் பேசி விட்டேன். சதி செய்து என்னை மூர்க்கத்தனமாய் வஞ்சித்து விட்டான் அம்மூடன். கற்பரசியாய் வாழலாம் என கனவு கண்டேன். எனது கனவு அழிந்து விட்டது. ஆசை நிராசையானது' எண்ணம் மண்ணாயிற்று. வாழ்வு வற்றிப் போயிற்று. இனி நான் விபசாரி.

விபசாரி! விபசாரி என்று கூற உனக்கு வெட்கமாய் இல்லையா?'

அத்தான்! களங்கப்படுத்தப்பட்ட கன்னி நான், சோரம் போன குற்றவாளி. நீதி மன்றத்திலே குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட வேண்டியவள்'

'குற்றவாளி! நீயல்ல குற்றவாளி உன்னைக் களங்கப்படுத்திய அக் கல்நெஞ்சக் கசடன், எனது உருவிய வாளுக்கு இரையாகப் போகின்றான்'

'அத்தான்! வேண்டாம். வேண்டுமானால் அவருக்கே என்னை பலியிட்டு விடுங்கள்.

'பலி! பலி கொடுக்கும் பாதகனா நான். உன் வாழ்வை சீர்குலைத்த அந்த வஞ்சகனை என்ன செய்கின்றேன் பார்'—எனக்கூறிவிட்டு விரைந்து நடந்தான்.

அஞ்சலி அழுதாள். என்ன செய்வதென்று அறியாமல் விழித்தாள்.

தினகரன்! அவன் அரம்பையர்களை—சேல்விழியாள்களை — அவலநிலைக்குக் கொண்டு வருபவன். மதத்தையும் மகேசுவரனையும், மடாதிபதிகளையும் நம்பிவாழ்பவன். கண்ணின் கருமணிகளைப்போல் இந்து மதத்தைக் காப்பாற்றி வந்தவன். இதிகாச ஏடுகளையெல்லாம் 'கடவுளர்களின் கோக்கோக பக்குவம்' என எண்ணுபவன். காமம் என்பது ஒரு காட்டாறு' என எண்ணி கட்டழகிகளை கட்டிலிலே கட்டியணைத்துக் கொஞ்சியவன். அப்படிப்பட்டவனைத்தான் .........

வந்து விட்டான் தினகரனை. 'அத்தான் [illegible] அன்பு மொழிகளையும், ஆசை வார்த்தைகளையும் அள்ளி வீசிவிட்டு என்னை அனாதையாக விட்டுச் சென்ற வீரர் இவர்தான்'

'கோழைக்குப் பெயர் வீரன்...... வஞ்சகனுக்குப் [illegible] நல்லவன். துரோகிக்குப் பெயர் [illegible]க்குச்செயல்காரன். அக்கிரமக்காரனுக்குப் பெயர் அரசியல்வாதி'

'சந்தர்! வீணைப் பேசாதே' வாடாத முல்லையை கசக்கி முகர்ந்த வஞ்சகன்தான். அதற்காக நீ என்ன செய்யப் போகின்றாய்?'

'சோரத்தின் சின்னமாய் விளங்கும் சிசுவை, விபசாரத்தனத்தின் விபரீத எண்ணத்தால் தோன்றிய சேயை குத்திக்கொலை செய்தால் தான் என் மீது ஏற்பட்டுள்ள மாசு நீங்கும்' எனக் கூறி ஓடினான்.

கத்தி மின்னியது. சேய் அழுதது. தினகரன் அசையாச் சிலையானான். அஞ்சலி அழுதாள். பெற்றமனம் துடிதுடித்தது.

குழந்தையின் கழுத்தை கத்தி முத்தமிட்டது. பிறகு.........சந்தர் கொலைக் குற்றத்திற்காக வழக்குமன்றம் ஏறி சிறையிலே தள்ளப்பட்டான்.

ஆனால் அஞ்சலி............!

தினகரன் திருந்தி விட்டான். மந்தமாருதம் வீசும் பொழுதினிலே மல்லிகை மணம் கமழும் மலர்த் தோட்டத்திலே இருக்கும் மாளிகையின் மஞ்சத்திலே மதுவைக் குடித்து விட்டு மான்விழி மடந்தையாகளை அணைத்த கசடன், இன்று அஞ்சலியின் ஆசைக் கணவனாக மாறி விட்டான்.

அத்தானின் விடுதலைக்காக அஞ்சலி அநேக அவதிக்குள்ளானாள். கடைசியில் அவள் வெற்றிப்பாதையிலே முதலடி எடுத்து வைத்து விட்டாள்.

சமூகம் ஒரு சிலந்திக்கூடு. சிலந்தி கூட்டைக் கட்ட எவ்வளவு சிரமப்படுகின்றதோ அதேபோல் சமுதா[illegible] மக்களை ஒன்று திரட்ட சிரமப்படத் தான் வேண்டும்.

நாட்டுப்பணி புரிந்தால்...! சந்திரனுடன் அஞ்சலி சென்று ஆயி[illegible] மாயிரம் தியாகப்பணி புரிந்தா[illegible] நாடே அவள் பணியினைக்கண்[illegible] மகிழ்ந்தது என்றால் அவள் கண[illegible] தினகரன் எப்படி இருப்பான்.

ஆனால், தினகரன்......

ஓர் நாள் மாரடைப்பால் மரண[illegible] அடைந்தான். அஞ்சலி அழுதாள்—அலறினாள் — துடித்தாள்—துவண்[illegible] போனாள்.

இனி அவள் விதவை! வீதியி[illegible] போகக்கூடாது. போக போக்கிய[illegible] களிலே புரள அருகதையற்ற அப[illegible] வாழ்வின் இன்பத்தை மறக்க வே[illegible] டியவள்.

சந்திரன் துடித்தான். என்[illegible] செய்வதென்றறியாது விழித்தா[illegible] அஞ்சலி பிரம்மை கொண்டவளை[illegible] போல் ஆனாள். ஆனால் அவள் இ[illegible] வுலகில் வாழ விரும்பினால்தானே[illegible] சமூகச் சட்டங்களுக்கு கட்டுப்ப[illegible] வேண்டும்.

வாழ்க்கை எனும் பூஞ்சோலை[illegible] வரண்ட பாலையாக்க விரும்பினாள்[illegible]

இனி அவள் இவ்வுலகில் வா[illegible] விரும்பவில்லை. 'தற்கொலை.... ஆம், அதுதான் நல்லவழி' எ[illegible] எண்ணினாள். அவளது எண்[illegible] கள் ஒரு சிறந்த கடிதமாக ம[illegible]

அஞ்சலியின் வாழ்வி[illegible]

11-ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்வைத் தியாகம் செய்த உத்தமரே!

வருகின்றேன், வணக்கம். இக்கடிதம் உங்கள் கையில் கிடைக்கும் பொழுது உங்கள் அருமை அஞ்சலி பிணமாகிவிட்டிருப்பாள். அன்று நீங்கள் என்னை 'விபசாரி' என்று ஏசினீர்கள். இன்று என்னை 'விதவை' என்றுப் பேசுகிறது சமூகம். சூதும் வாதும் நிறைந்த சூழ்ச்சிக்காரர்களிடையே நான் வாழ விரும்பவில்லை. நான் போகின்றேன். என்னைத் தொடாதீர்கள் அத்தான். "அஞ்சலி" என எழுதி வைத்துவிட்டு ஓடினாள் இரயில் தண்டவாளத்தை நோக்கி.

இரவு......!

கள்வர்களும் அஞ்சும் இரவு. சந்திரன் எங்கோச் சென்று அப்பொழுதுதான் வீட்டிற்குத் திரும்பினான். அப்பொழுது அவன் மேஜை மீது ஒரு கடிதம் இருக்கக் கண்டான். எடுத்துப் பார்த்தான். அவன் கண்கள் சுழன்றது.

"என் ஆசைக்குரிய அஞ்சலியா— பிணமாகிக் கிடப்பாள். அவள் பிணக் கோலத்தையா நான் பார்க்க வேண்டும். என் இதய ராணியாக அவள் இல்லாவிட்டாலும் அன்பு ராணியாக இருந்தாளே" என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது எங்கிருந்தோ 'கிரீச்' என்ற இரயில் கூவும் சத்தம் கேட்டது.

"ஐயோ அஞ்சலி......!" என்றலறிக் கொண்டே ஓடினான். இரயில் நெருங்கி விட்டது. இன்னும் சற்று தாமதித்து இருந்தால் சந்திரன் அவனது அஞ்சலியைக் கண்டிருக்க மாட்டான். பிடித்து விட்டான் அவளை.

'அஞ்சலி! இது நியாயமா?'

'அத்தான்! வேண்டாம்...என்னை விட்டு விடுங்கள். இனி என் வாழ்வு இலையுதிர்ந்த மரம். அறுந்த கயிறு. சிதைந்த கூடு. உடைந்த கிண்ணம்.'

'அஞ்சலி! அப்படிச் சொல்லாதே .........நான் இருக்கின்றேன் உன் வாழ்வை வளமாக்க. வசீகரமும், ...ர்த்தை ஜாலங்களும் நிறைந்த ...ன்னை நான் விடுவேனா...மறுமணம் ...த்துக் கொள்ளலாம்.'

...மறுமணம்...எனக்கும் உங்களுக் ...மணம்...வேண்டாம். நான் எச் ...ற்பண்டம். கசக்கிய முல்லை.'

'அஞ்சலி! இருந்தாலும் பாதக ...ல்லை. விதவையை மணப்பேன். ...ா போகலாம் வீட்டிற்கு'—அழைத் ...க் கொண்டு வந்தான் சந்திரன் ...வளை.

அன்றிரவுப் பொழுதைக் கழித் ...ள் அஞ்சலி. பொழுது விடிந்தது. ...வளை அன்றிலிருந்து வாலிபர்கள் ...ரு மாதிரியாகப் பார்த்தனர். ...வளை சதிராடும் கரசி என்றும், ...ாலிபர்களின் உள்ளத்தைக் கிளறும் வசீகர தேவி என்றும் எண்ணினர்.

ஆனால் அவள்...!

மறுமணம்! விதவைக்கு மீண்டும் இன்ப வாழ்வு. கணவனை இழந்து ...ண்ணீர் சிந்தும் கன்னிக்கு மீண் ... புதுவாழ்வு. புவனத்தை ...வறுத்த அப்பூவைக்கு—பொற்சிலை ...ளுக்கு மறுமணம்.

ஆம்! அவளை அவளின் அத்தான் ...மணம் புரிந்துக் கொள்ள சம் ...வு விட்டார். உடைந்த கிண் ...உயர்ந்த கிண்ணம. உமாற்ற ... குலுங்கும் புதுமரமாக மாறிவிட்டது.

அன்றிரவு......

சந்திரன் அஞ்சலியைக் கண்டு புன்னகை புரிந்தான். அவளோ நாணத்தால் தலை குனிந்தாள்.

'அஞ்சலி......!'

'அத்தான்......!'

'நம் வாழ்வு...... எப்படித் தெரியுமா இருத்தல் வேண்டும்?' என்று கேட்டு விட்டு அவளின் கதுப்புக் கன்னங்களைக் கிள்ளினான்.

அப்பொழுது இன்பம் 'கொள்ளை கொள்ளை' என்று கூவியது. நாட்கள் உருண்டன.

ஆனால் சமூகம்......!

மணமாகாமலேயே கள்ளக் காதலா? விதவைக்கு புதுவாழ்வா? என்றக் கேள்விகளைக் கேட்டது!

'அன்பரே! நமக்கு எப்பொழுது திருமணம்......?'

'அஞ்சலி! அவசரம் ஏன்?'

'அத்தான்! விதவைகளை மறுமணம் புரிந்துக் கொள்ள சில வீணர்கள் கோழைகளாகின்றனர். விதவைப் பெண்களிடம் காதற் கதைகளைப் பற்றி கதையளந்து விட்டு அவர்களின் கற்பைச் சூரையாடுகின்றனர். சீர்திருத்தம் பேசும் சிலர்கள் சிலர் சிற்றிடையாள்களைக் கெடுத்து விட்டு செல்லுகின்றனர். ஆதலால் அவர்களைப் போல் தாங்களும்......'

'அஞ்சலி! சந்தேகம் என்பது பெண்களின் கூடப் பிறந்த சொத்து'

'வேதாந்தம் வேண்டாம்...வேண்டியதைச் செய்யுங்கள்'

'சரி! இதோ பார்'... எனக் கூறி விட்டு விரைந்துச் சென்றான் சந்திரன்.

திருமண ஏற்பாடுகள் தீவிரமாக நடந்தது. மகிழ்ச்சியால் துள்ளினாள் அத்துடியிடையாள்.

வேதியர்கள் வேதபாராயணம் ஓதாமல் விண்ணவர்கள் பூமாரிப் பொழியாமல், அருந்ததிக்கும் அம்மிக்கும் வேலை வைக்காமல் அஞ்சலியின் மலர்க்கரங்களை சந்திரன் பற்றினான்.

'குழந்தைப் பெற்றவளுக்கு மீண்டும் திருமண வாழ்வா?

தேவடியாளுக்கு தேரோடும் தெருவில் மாளிகை வாசமா?

விபசாரிக்குப் புது வாழ்வா?

—இந்தக் கேள்விகள் அவ்வூர்ப் பெண்களின் வாயிலிருந்து உதிர்ந்தவைகள்!

மாலை வேளையிலே......

காதலனோடு கன்னி சென்றாள், கருத்திலே களங்கம் உள்ளவர்கள் ஒரு மாதிரியாக அஞ்சலியைப் பார்ப்பர். அவள் அழகுத் தெய்வமல்லவா? ஆனால் அதே சமயத்தில் சந்திரனைக் காண்பவர்களின் முகம் பல விதக் கோணங்களாக மாறும்.

'கள்ளன்'

'திருட்டு நாய்'

'குழந்தையைக் கொலை செய்த கொடும்பாவி'

சதியின் விளிம்பிலே நிற்கும் வஞ்சகன்' என்றெல்லாம் அவனைப் பார்த்து ஏசினர். மக்கள் தூற்றினர்.

பற்றியிழுக்கும் பாசக் கயிறடா அவள்.

வெட்டும் அவளின் வேல் விழிகள் எனது விலாவைக் குத்துகின்றதடா!

வெண்மையான முத்திலே எப்படி நீலம் உள்ளதோ அதைப்போன்ற கண்களை உடையவளடா!

என்று அவளை வாலிபர்கள் வர்ணிக்க ஆரம்பித்து விட்டனர்.

ஏன் வாலிபர்கள் அவளை அப்படி வருணிக்கின்றனர் என்றால் பிழைப்பைத் தேடி சிறிய நகரத்தில் இருந்து பெரிய நகரத்திற்கு வந்து விட்டனர்.

அஞ்சலியை ஒரு அசடன் எப்பொழுது பார்த்தாலும் பின்தொடர ஆரம்பித்து விட்டான்.

அஞ்சலி அஞ்சினாள். கணவனிடம் சொல்ல சற்றுத் தயங்கினாள். ஓர் நாள் இரவு......

அஞ்சலியின் கணவன் சந்திரன் வெளியூர் சென்றிருந்தான். வீட்டில் வேறு யாரும் இல்லை.

அச்சத்தினால் வெளிக்கதவை தாள் போட்டுவிட்டுப் படுத்தாள். நல்ல உறக்கம். யாரோ மெல்ல தன்னை வருடுவது தெரிந்தது. விழித்துப் பார்த்தாள். யாரோ ஆடவன் பக்கத்தில் இருந்த ஸ்விட்சை அழுத்தினாள்.

அஞ்சிவிட்டாள் அவனைப் பார்த்தவுடன், தினசரி அவனைப் பின் தொடரும் அதே ஆள்தான்.

'நள்ளிரவிலே, யாருமறியா வேளையிலே கன்னியைக் களவாடும் கள்வனாய் வீட்டிலே புகுந்த நீயார்?' —பொற்சிலை பேசினாள்.

'முல்லையில் உள்ள தேனை உறிஞ்ச வந்த வண்டு'

'வண்டா......வஞ்சகா! பேசாமல் போய்விடு. இல்லையேல், ஆபத்து உன்னை அணைத்துக் கொள்ளும்.'

'மிரட்டாதே! எறும்பின் மிரட்டலைக் கண்டு யானை அஞ்சிவிடாதே அப்படி யிருக்க நீ எப்படி...' எனக் கூறி அவளை அணைக்க அவளருகில் வந்தான்.

'பளீர்' என்றறைந்தாள்.

பாதகன் பாவையை விடவில்லை. கட்டியணைக்க அருகில் வந்தான், கதறினாள்.

'தடதட' என்ற சத்தம் கேட்டது வஞ்சகன் ஓடிவிட்டான்.

'துரோகிகள்! காமம் என்பதை மட்டும் கற்றக்கசடர்கள். அவர்களைக் கூறி என்ன பயன்? ஆண்டவன் அத்தனை பேருமே காம சூத்திரத்தைக் கற்று தேறி இருக்கின்றார்கள் என்றால் அவர் பெற்ற பிள்ளைகட்கு மட்டும் அந்த வாசனை வீசாதா?'—என்ற சிந்தனையிலேயே மூழ்கி படுத்து விட்டாள்.

பொழுது விடிந்தது !

சந்திரன் வீட்டினுள் அடியெடுத்து வைத்தான். 'அத்தான்'-என்றலறி அவன் காலைப்பிடித்துக் கொண்டாள் அஞ்சலி. அழுதாள். காரணம் புரியாது விழித்தான் சந்திரன்.

'அஞ்சலி! ஏன் அழுகின்றாய்? என்ன நேர்ந்துவிட்டது?'

'அத்தான்! கள்ளன் ஒருவன் நள்ளிரவில் வீட்டினுள் புகுந்து பலவந்தம் செய்தான்!'

'என்ன—கண்ணகி பிறந்த மண்ணிலா அந்தக்கயவன் பிறந்தான்?'- எனக்கூறிவிட்டு வெளியேறினான். அன்றிரவு......

வெகு நேரமாகியும் சந்திரன் வரவில்லை, அஞ்சலி ஆவலோடு எதிர் பார்த்திருந்தாள். ஆனால் சந்திரன்...

பொழுது புலர்ந்தது- ஊர்ப்பக்கத்தில் உள்ள ஆற்றின் கரையில் சந்திரனின் பிரேதம் கிடந்தது. அதைச் சுற்றிக் கொண்டிருந்தனர் ஊர்மக்கள்

அஞ்சலிக்கு யாரோ ஓடிவந்து சொல்லினர்.

'அஞ்சலி! உன் அத்தான் ஆற்றங் கரையில் பிரேதமாய் உள்ளார்'

'ஆ அத்தான்! என் அத்தானா இறந்து கிடக்கின்றார்...என் வாழ்வில் ஒளியேற்றி உயிர் ஊட்டிய உத்தமரா மடிந்து விட்டார்...எந்தப் பாதகன் செய்த வேலை'—என்று அழுதாள்.

வீட்டிலிருந்து ஆற்றங்கரைக்கு அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தாள்.

'ஐயோ! என் அத்தானை—என் அன்புக் கணவரை—இந்தக் கதியிலா காண வேண்டும்......நான் மாபாவி' ...என்று அழுதழுது தேம்பினாள்.

உடனே உற்றாரும் உறவினரும் கூடி சந்திரன் உடலை மயானத்துக்கு எடுத்துச் சென்றனர்.

சந்திரனைச் சதிசெய்த மூர்க்கன் வெற்றிப் பாதையிலே அடியெடுத்து வைத்து விட்டோம் என்று பூரித்தான்.

'வஞ்சகர்கள்! அழகை அடிமைப் படுத்தும் அசடர்கள் நிறைந்த இந்த நாட்டிலே ஒரு கன்னிப்பெண் காமப் பசி பிடித்தக் கயவர்களிடையே வாழ முடியுமா? சமூக

## 'ஓட்டு வெளியிலே!'

அ. ச. பாலு, பொள்ளாச்சி.

★

ஓட்டு ஓட்டு வெளியிலே!
ஊழல் காங்கிரஸ் கும்பலை!
நாட்டு மக்கள் வாழ்வையே
நாசம் செய்த நரிகளை! (ஓ)

மாட்டுப் பெட்டி தன்னிலே
மண்ணைப் பெற்றுச் சென்றவர்
ஓட்டு கேட்க வருகிறார்!
உஷார்! ஓட்டு வெளியிலே (ஓ)

சட்ட சபைக்கு ஜோடியாய்
தயார் செய்த மாடுகள்!
ஒற்றை மாடாய்விட்டது!
ஊரில் மானம் கெட்டது! (ஓ)

மட்டிலாத வரிகளை
மக்கள் மீது போட்டவர்!
கஷ்டம் நீக்குவீர் எனில்
கடவுளைப் பார்! என்கிறார் (ஓ)

வரி விதிக்க இவர்களாம்!
வசதி செய்யக் கடவுளாம்
அறிவு அற்ற நிலையிலே
ஆட்சி செய்யக் கிளம்பினர்! (ஓ

உரிமை கேட்டு நின்றிடில்
உணவுப் பஞ்சம் என்றிடில்
'வெறியர் போல' மக்களை
வேட்டையாடும் வீரர்கள் (ஓ)

நமது வாக்கின் உதவியில்
நகர சபைப் பதவியில்
அமருதற்கு 'அகதிபோல்'
அகிம்சையாளர்! வருகிறார் (ஓ)

அமைதியில்லை நாட்டிலே
அவர்கள் ஆண்ட பாட்டிலே!
இம்மியும் நன்மை இல்லையே!
எனினும் இவர்கள் தொல்லை

12-ம் பக்கத் தொடர்ச்சி

சூழ்நிலையினால், வாழ வழி தெரியாததினால் சில சுயநலக் கூட்டத்தினர் பெண்களை வைத்துக் கொண்டே 'பிசினஸ்' நடத்துகின்றனர். அந்தச் சூதுமதியினர்கள்—சுரண்டல் தொழில்காரர்கள் — ஒழிந்தால்தான் பெண்கள் மானமோடு இந்நாட்டில் வாழ முடியும்.

நான் விபசாரி என்பதையும் மறந்து என் அத்தான் என்னை மணந்து கொண்டார் மகிழ்ச்சியோடு. உளம் பூரித்தார் 'விதவையை' மணந்துக் கொண்டோமென்று. ஆனால் நாங்கள் வாழ்வதைப் பார்த்து சகியாத சில காம வெறியர்கள் என் அத்தானுக்கு மரணத்தை விளைவித்தனர். இனி என் அத்தான் போனபின் எனக்கு வாழ்வேது"—என்ற சிந்தனையிலேயே அன்றெல்லாம் படுத்துப் புரண்டாள்.

மறுநாள்......!

அஞ்சலி விழித்தாள் பொறாமைப் புழுக்களும், சுயநலமெனும் சுறுமீன்களும், வஞ்சகம் எனும் வண்டுகளும் இருப்பதைப் பார்த்து மனம் புழுங்கினாள்.

இனி நமக்கேன் வாழ்வு...எனக் கூறிக்கொண்டே தோட்டத்தில் இருந்த கிணற்றை நோக்கி ஓடினாள். என் அத்தானை அணைத்துக் கொண்ட நீரே! நீ என்னையும் அணைத்துக் கொண்டு என் அத்தானோடு சேர்த்துவிடு' எனக் கூறிக் கொண்டே கிணற்றில் விழுந்து விட்டாள் பாவம்! அபலைப் பெண் அத்தானுக்காக வாழ்ந்தாள். இன்று அத்தானுக்காகவே உயிரைத் தியாகம் செய்து கொண்டாள்.

ஆம்! 'அவள் ஓர் தியாகிதான்'

## மதுரைக்கு அண்ணா வருகை

21-9-52 ஞாயிற்றுக்கிழமையன்று திராவிடநாடு பிரிவினை நாளை முன்னிட்டு மதுரை நகரில் பல பாகங்களில் ஏறக்குறைய சுமார், 300 இயக்கக் கொடிகள் ஏற்றுவிக்கப்படும். அன்று காலை 10-மணியளவில் கீழச்சந்தைப் பேட்டை இளைஞர் பகுத்தறிவு மன்றத்தின் சார்பாக அண்ணா அவர்கள் கொடியேற்றி வைப்பார்கள். அன்று மாலை 4-மணிக்கு பெரிய விளக்குத்தூணிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு நகரின் பல பாகங்களின் வழியாகச் சென்று தமுக்கம் மைதானத்தை வந்தடையும், 7-மணிக்கு தோழர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். திராவிடநாடு பிரிவினையைப் பற்றி அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## ராஜம்மாள்— கருப்பண்ணன்

உடுமலைப்பேட்டை கழகத் தோழரும் "திராவிடன்" ஏஜெண்டுமான தோழர் கு. கருப்பண்ணன்—தோழியர் க. ராஜம்மாள் ஆகியோருக்கு 7—9—52 தாராபுரத்தில் மணமகள் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சி இனிது நடந்தேறியது. நண்பர்களால் வாழ்த்துப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இதன் நினைவாக 'திராவிடன்' வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று நன்கொடை வழங்கப்பட்டது.

# * நவதானியம் *

இளங்கீரன்.

கல்லூரி மாணவர்களே,

நீங்கள் என்ன படித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இனிமேல், கெமிஸ்ட்ரி, ஹிஸ்ட்ரி என்றெல்லாம் பேசிக் காலத்தை வீணாக்கிக் கொள்ளக் கூடாது; சயன்ஸ், பாலிடிக்ஸ் அப்படின்னு உளறிக் கொட்டக் கூடாது! என்ன நான் சொல்றது புரியுதா? பேசாம கண்களை இறுக மூடிக் கொண்டு, நமது முதல் பரம்பரையான ஸ்ரீமான் குரங்கு அவர்களைத் தியானம் செய்து கொண்டிருக்க வேண்டும்! பாடபுத்தகமாவது, பரீட்சையாவது எல்லாம் சுத்த ஹம்பக்! திருவாளர் குரங்ஙனார் அவர்களை அப்படியே மனதிலே இருத்தி பூஜிக்க வேண்டும்; ஆமாம்! இப்படிச் சொல்வதைக் கேட்டு, என்னைச் சுட்டுப் பொசுக்கும் அளவுக்கு உங்களுக்கெல்லாம் கோபம் வரலாம்...! எனக்குக் கவலையில்லை! உங்களுடைய கோபம் என்னை ஒன்றும் செய்ய முடியாது! அன்பர் ஆச்சாரியாரைக் கொண்டு உங்களுடைய கோபத்தையெல்லாம் குளத்தில் அமுக்கி விடுவேன்!

மனிதன் நாகரிகத்தின் உச்சியிலே உலாத்துகிறான். அவனுடைய அறிவும், சிந்தனையும் வாவா வானத்தைப்போல பரந்து விரிந்து வருகிறது......மனிதனுடைய முதல் தந்தையான 'அமீபா' வாழ்ந்த காலத்தைப் பார்த்துப் பரிகசிக்கிறான்! அப்படி இப்படீன்னு உளறக் கூடாது. சரித்திரத்தையும், விஞ்ஞானத்தையும், நாகரிகத்தையும் மூட்டைக் கட்டி வைத்து விட்டு, பேசாமல் அனுமார் கோயில் பக்கம் நடையைக் கட்ட வேண்டியதுதான்!

என்மேல் சீறிப்பாய வேண்டாம். நமது முதலமைச்சர் ஆச்சாரியாரே கூறிவிட்டார். அனுமாரைத் தியானியுங்கள் என்று. இப்போது புரிகிறதா? கல்லூரி மாணவர்கள், பல்கலைக் கழகத்தில் படிக்கும் இளைஞர்கள் இவர்கள் மத்தியிலே கூறிவிட்டார். மாணவர்களே, நீங்கள் படிக்காவிட்டாலும் பாதகமில்லை; பரீட்சையில் தேறாவிட்டாலும் கவலையில்லை; ஆனால், சினிமா பார்க்காதீர்கள்; அனுமாரைத் தியானம் செய்யுங்கள் என்று. இனிமேல் கோபிக்கமாட்டீர்களே...!

உங்களுக்குக் கோபம் மட்டுமல்ல, வேதனையும், துக்கமும் கூட வரும்! இப்படிப்பட்டவர்களெல்லாம், நமது நாட்டிலே அமைச்சராக இருக்கிறாரே என்று! நமது நாடு என்ன, எகிப்தா—இங்கிலாந்தா? இவர்களையெல்லாம்.........?

நம்ம நாட்டிலே பட்டினியால் யாரும் சாகமாட்டார்கள். அப்படிச் சாகத் தெரியாது! பாலாறு ஓடுகிறது, பஞ்சம் கிடையாது 'பாரத மாதா'க்களின் ஆட்சியிலே. அப்படியிருக்கும்போது ஏன் சாக வேண்டும்?

ராயல சீமையில் இருபது பேர் இறந்து விட்டார்கள், பட்டினியால்—இது சுத்தப் பொய் ஆச்சாரியார் பொய்யென்று சொல்லி விட்டார். எதிர்கட்சிக்காரர்களுக்கு, ஏழு கம்பி மட்டுமல்ல, எழுநூறு கம்பியுள்ள சிறைச்சாலையைத்தான் கட்டும்படி சொல்ல வேண்டும்! வேறு என்ன, இருபது பேர்கள் செத்து விட்டார்கள் என்று பொய்யைச் சொல்லலாமா? சேச்சே...! பேச்சுரிமை கொடுக்கப் போய்த்தான், இவர்கள் இந்த மாதிரிச் சொல்லித் திரிகிறார்கள். பட்டினியாவது, பஞ்சமாவது? செத்து விட்டார்களாம், செத்து.

அதாவது, ஒன்றிரண்டு பேர் தற்கொலை செய்து கொண்டார்கள்! அதைப்போய் பட்டினியால் செத்தார்கள் என்று சொல்ல முடியுமா? முட்டாள்கள்! விஷயம் என்ன தெரியுமோ?

ஒரு உயர் சாதிக்காரன் கீழ்சாதிப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்றான்—சுற்றத்தார் அதை விரும்பவில்லை. தடுத்தார்கள் கலியாணம் செய்யக் கூடாதென்று! அவன் அப்படிச் சொல்வதைக் கண்டு எல்லோரும் வெறுத்தார்கள். அதனால் அவன் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டான். அதைப் போய் பட்டினியால் செத்து விட்டானென்று சொன்னால்? "கேட்டீர்களா கதையை!"

★

## திராவிடத்தில் திருநாள்!

"யாதவி"

★

எழுந்ததடா "புரட்சி"யொன்று எங்கும் நாட்டில்
விழுந்ததடா வீணர்களின் திட்டம் தீயில்

புயலிலே சிக்கிய அப்புல்லர் கொள்கை
பொங்கியெழும் கடலிடையே புழுவைப்போல
புதைந்ததடா புதுவாழ்வும் மக்களிடை மலரக்
கண்டேன்

உழைத்துழைத்து உரங்கொண்ட கைகளாலே
உலகெங்கும் கோனாட்சி மறையக் கண்டேன்
உலுத்தர்களும் ஓடியோ ஒழியக்கண்டேன்

உயிர்இருந்தும் உணர்வில்லாப் பிண்டங்களாய்
உலகறியா துழைத்து வந்த உழவர் தம்மின்
உரிமைப்போர் வெற்றிபெறக் கண்டேன் கண்டேன்

விழித்தெழுந்தேன் வெறுங் கனவா என்று நொந்தேன்
வீணான கனவல்ல நனவின் காட்சி
வீழ்ந்திடும் வஞ்சகத்தின் இன்பக்காட்சி

அறிவுபெறும் திராவிடத்தின் பிரியும் நன்னாள்
அன்னாளே எல்லோர்க்கும் இன்பப் பொன்னாள்
அன்புடனே அறம்கொழிக்க அரசுசெய்து
அறிஞருள்ளம் களிப்படையும் தனித்திருநாள்

## நகரசபைத் தேர்தல்.

17-வது வட்டம்.



நகர மக்கள் கூட்டணியின் ஆதரவு பெற்ற ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி அபேட்சகராகிய எனக்கு 20—9—52-ந் தேதி **பனைமரப் பெட்டியில்** உங்கள் வோட்டுகளை வழங்க வேண்டுகிறேன்.

—ரங்கநாதன்

## முகப்புப் படம்.

★

மூவாலூர் மூதாட்டி, தன்மான இயக்கத்திலே தளராது உழைத்து வந்த வீராங்கனை—கடந்த மூன்று ஆண்டுகளாக பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று தி. மு. கழகப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருபவரும், ஆகஸ்டு 1-ந் தேதி சென்னையில் இந்தி எதிர்ப்பு போரில் கலந்து கொண்ட மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் உடல் நலன் பெற்று வருகிறார்.

## நகரசபைத் தேர்தலும் தி. மு. கழகமும்

★

நகரசபைத் தேர்தலில், தி. மு. கழகம் தனித்து நின்று போட்டியிடவில்லை. ஆனால் கட்சி ஆதிக்கமற்ற முறையில் முற்போக்கு கொள்கை கொண்ட கட்சித் தோழர்களின் கூட்டு முயற்சியில் 'நகர மக்கள் கூட்டணி' என்ற பெயரில் சென்னை நகரசபைத் தேர்தலில் ஈடுபட்டிருக்கிறது எனவே இக்கூட்டு முயற்சிக்கு மாறாக தேர்தல் கூட்டங்களிலோ அல்லது அறிக்கைகளிலோ தி. மு. கழகப் பெயரை யாரும் பயன்படுத்துதல் கூடாது என்பதை உணர வேண்டுகிறேன். இந்நிலையில் சென்னையிலே கோமளீஸ்வரன் பேட்டை கிருஷ்ணாம்பேட்டை ஆகிய இரு வட்டங்களில் மட்டும் யாரோ சிலர் கூட்டு முயற்சிக்கு எதிராக தி. மு. கழகப் பெயரை நேரடியாக உபயோகப்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது எனவே அவ்வட்டங்களிலுள்ள வாக்காளர்கள், கழகத் தோழர்கள், அனுதாபிகள் இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

என். வி. என், செயலாளர்.
சென்னை மாவட்ட தி.மு.க.



தோழர் சி. இவி. ராசன்
(சென்னை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர்)

சென்னை நகர மக்கள் கூட்டணியின் நிர்வாகக்குழு உறுப்பினர். நகர மக்கள் கூட்டணியின சார்பில் நிற்கும் அபேட்சகர்களின் வெற்றிக்காக இடைவிடாது தீவிரப் பணியாற்றி வரும் செயல் வீரர்.

## "முட்டியபின் குனிந்து கொடுக்கும் வர்க்கம்"

★

ஏகாதிபத்திய வெறியில் மூழ்கியவர்கள், பிறரது உரிமையை நேர்மை உள்ளத்துடன், அதற்கேற்ற கண்ணோட்டத்துடன் அலசிப் பார்த்து ஆவன செய்ய மாட்டார்கள். எவ்வகையிலாவது பிறரது உரிமையைப் பறித்துக் கொழுப்பதே ஏகாதிபத்தியத்தின் மூலதனமாகும். அதுபோலவே மக்களது மகத்தான சக்தி திறண்டு முட்டிய பின்னர் குனிந்து கொடுத்து ஓட்டம் பிடிப்பது ஏகாதிபத்தியத்தின் பிறவிக்குணமுமாகும். எனவே திராவிட நாட்டுப்பிரிவினையை எதிர்த்து டெல்லி ஏகாதிபத்தியம் சீற்றமடைவதில் ஆச்சரியமில்லை! ஆனால் உலக அரசியல் வரலாறு காட்டியுள்ள உண்மைக்கு டெல்லி ஏகாதிபத்யம் விரைவில் பணிந்தே தீரும் என்பது உறுதி. எனவே, இலட்சியத்திலே உறுதிகொண்ட தோழர்களே, நம் உரிமைக்காக தளராது பணியாற்ற முன்வீர்களாக!

—அறிஞர் அண்ணா.



## சென்னையில் பிரிவினை நாள் சிறப்புக் கூட்டம்

21—9—52ல மாலை 5-30 மணிக்கு
(மவுண்ட்ரோட்) எல்லை ரோட் அருகிலுள்ள பெரிய திடலில்
தோழியர் அருண்மொழி தலைமை வகிப்பார்
மு. கருணாநிதி—என். வி. நடராசன்—கவிஞர் கண்ணதாசன் பேசுவர்.
இரவு 9-மணிக்கு இசைமுரசு நாகூர் அனிபா இன்னிசை நடைபெறும்


—தி. மு. கழகம்

# அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி இல்லத்தில் திருமணம்

தன்மான இயக்கத்தின் தளரா உழைப்பாளரும் 'அஞ்சாநெஞ்சன்' என்ற சிறப்புப் பெயருக்கேற்ப செயலாற்றும் தன்மையில் தலைசிறந்து விளங்கிய வருமான மறைந்த மாவீரர் கே. வி. அழகிரிசாமி அவர்களது மகன் கே. வி. எ. இராமமூர்த்திக்கும் தோழியர் ஆர். கமலாவிற்கும் அழகிரிசாமி அவர்களின் மகள் கே. வி. எ. தயாளுவிற்கும், தோழர் ஜி. இராதாகிருஷ்ணனுக்கும் 7—9—52-ந் தேதி ஞாயிறு காலை 9-மணிக்கு பட்டுக்கோட்டையில், அழகிரி இல்லத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் திருமணம் நடந்தேறியது

நடிப்புப் புலவர். கே. ஆர். ராமசாமி, அ. பொன்னம்பலனார், டி. பி. பொன்னுசாமிப் பிள்ளை, என். எஸ். இளங்கோ, ஆகியோர் விழாவிற்கு வந்திருந்த மக்களை மகிழ்ச்சிக்கடலில் திளைக்கும் வண்ணம் சொற்பொழிவாற்றினர். கலைவாணரின் நகைச்சுவை மிகுந்த சொற்பொழிவு எல்லோரையும் மெய்மறக்கச் செய்தது விழாவின்போது நடிப்புப் புலவரும் கலைவாணரும் பண்ணிசைத்துச் சிறப்பித்தனர்.

★





கே. வி. எ. இராமமூர்த்தி—ஆர். கமலா



ஜி. இராதாகிருஷ்ணன்—கே. வி. எ. தயாளு

மணமக்களைப் பாராட்டி திருமண விழாவிற்கு வந்திருந்தும், வாழ்த்துக்கள் அனுப்பிய தோழர்கள். ஜி. டி. நாயுடு, எம். எ. முத்தையாச் செட்டியார், சே. எ. பி. விசுவநாதம், விருதை வி. வி. இராமசாமி, இரா. நெடுஞ்செழியன், நடிகவேள் எம். ஆர். ராதா, ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன், எ. பி. ஜனார்த்தனம், எஸ். குருசாமி, ஜூபிடர் சோமு, மாலி பிக்சர்ஸ், கிரேட் இந்தியா பிலிம்ஸ், மாரியப்பா ஆகியோர்களுக்கு எனது தந்தையாரின் சார்பில் நன்றி கூறுகிறோம்.

—கே. வி. எ. இராமமூர்த்தி

## தொழிலாளர்த் தோழர்களே

உங்கள் தொழிற் சங்கங்களில் அரசியல் பிற்போக்காளர்களின் ஆதிக்கத்தை வளர விடாதீர்கள். தொழிற் சங்கங்களில் அரசியல் ஆதிக்கம் இருத்தல் கூடாது என்ற பகட்டுரை கூறி, அதே சமயத்தில் தாங்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகளின் பித்தலாட்டக் கொள்கைகளைப் புகுத்தி வருகின்றனர். இவ்வித அரசியல் பச்சோந்திகளுக்கு எதிர்காலத்தில் தொழிற் சங்கங்களில் இடமளிக்காதீர்கள்.

"திராவிடன்"

Edited rinted and Publish-edby N. V. Natarajan at Somu Printers 16, Reliance RiceMills Street (Walltax Rd P. O.) Madras.